விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள,
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-532)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை (20.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

### 6 நாட்கள் தேடுதலின் பின்
# தெஹிவளையில் ரிஷாத் கைது



### 27 வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

*(கொழும்பு)* 6 நாட்கள் தேடுதல் வேட்டையின் பின் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் நேற்று அதிகாலை தெஹிவளையில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியூதீனை வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. 23

# ரிஷாத் பதியூதீனுக்கு அடைக்கலம் கொடுத்த
### மருத்துவர் உட்பட 7 பேர் கைது

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் கைது செய்யப்படுவதிலிருந்து 23

### யாழில் நேற்று
# 232 பேருக்கு பரிசோதனை
### எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் 23

### பௌத்த சங்கத்தின் அனுமதியின்றி
# 20ஐ சண்டித்தனமாக நிறைவேற்றினால் விபரீதமான விளைவுகளை சந்திப்பீர்
### ஜனாதிபதிக்கு ஆனந்த தேரர் எச்சரிக்கை

03ஆம் பக்கம் பார்க்க

### இலங்கைக்கு வழங்கப்படும் பணம்
# தமிழருக்கு எதிராகப் பயன்படாது என்பதனை உறுதிப்படுத்துங்கள்
### இந்தியப் பிரதமர் மோடிக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் கடிதம்



**(யாழ்ப்பாணம்)**
**இந்திய அரசால் இலங்கைக்கு வழங்கப்படும் பணம் தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தப்படாது என்பதனை உறுதிப்படுத்துங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.**

இந்தியப் பிரதமருக்கு விக்னேஸ்வரன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் எமது நாட்டின் பிரதமரிடம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கேட்டுக் கொண்டமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் 23

### ஆயுதங்களுடன் கச்சாயில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சாய் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வெடிகுண்டு மற்றும் 23


ராஜராஜ சோழப் பேரரசின் வரலாறு முடிவடைவதைத் தொடர்ந்து
நாளை மறுதினம்
வியாழக்கிழமை முதல்
'மகா அலெக்ஸாண்டர்' இன்
வாழ்க்கை வரலாறு
உங்கள் வலம்புரியில்

### வவுனியா வாள்வெட்டில்
# படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(வவுனியா)
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாணிக்கர் வளவுப் பகுதியில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந் 23

### பாராளுமன்றம் இன்று கூடுகின்றது
# 20 மீதான வாக்கெடுப்பு நாளை

(கொழும்பு)
பெரும் பரபரப்புக்கு மத்தியில் பாராளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டம் குறித்த பாராளுமன்ற வாக்கெடுப்பு நாளை இரவு இடம்பெறும் என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தச் 24

# யாழில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்
### புத்தளத்துக்கு அனுப்பப்பட்டார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பருத்தித்துறை தும்பளைப் பகுதியைச் சேர்ந்த கொரோனாத் தொற்றுக்கு உள்ளான அரச பேருந்து நடத்துநர் சிகிச்சைக்காக புத்தளம் மாவட்டம் இரணவில கொரோனா தடுப்பு விசேட வைத்திய 23

# 87 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
மினுவாங்கொட கொத்தணியில் நேற்று புதிதாக 87 பேர் தொற்றுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இறுதியாக அடையாளம் காணப்பட்ட 23


# மாவை - விக்னேஸ்வரன் நேரில் சந்தித்துப் பேச்சு



(யாழ்ப்பாணம்)
இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் 23

# மரண அறிவித்தல்

மண்ணில்
24 – 03 – 1959



விண்ணில்
19 – 10 – 2020

## இராசையா கணேசரத்தினம்

ஆவரம்பிட்டி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் குமுதெணி, அல்வாய் வடமத்தி, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கணேசரத்தினம் நேற்று (19.10.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பவளநாயகி (பழம்) அவர்களின் அன்புக் கணவரும் சிவரத்தினம், தேவரத்தினம், சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தபேசன், கௌதீபன், சிந்துப்பிருந்தன், சிந்துப்பிரியா, திவாகரன், சிந்துஜன், கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-553)

குமுதெணி,
அல்வாய் வடமத்தி, அல்வாய்.
077 909 7786
தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
07 – 10 – 1943



அகிலம் இருள
15 – 10 – 2020

## கந்தசாமி பேரின்பதாசன்

### ( ஓய்வுநிலை கல்வி அதிகாரி - மன்னார் )

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு ஏறாவூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பேரின்பதாசன் கடந்த 15.10.2020 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பவானி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் கவிதா, கார்த்திகா ஆகியோரின் தந்தையாரும் தவமணிதாசன், தனபாலசிங்கம் (Halifax), தேவகாந்தி, நந்தகுமார் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் Dr. தாமோதனின் மாமனாரும் நவரெத்தினராஜா, பராசக்தி, காலஞ்சென்ற புஸ்பராசா மற்றும் சண்முகராசா, காலஞ்சென்ற பகவதி, உதயராசா, சிவகாமி, கோகிலாதேவி (Halifax), காலஞ்சென்ற ஞானசூரியன், சித்திரா (Canada) ஆகியோரின் மைத்துனரும் சங்கீதா (Vancouver), Dr. மயூரன் (Halifax), Dr. கபிலன் (Halifax), Dr. அபிராமி (Halifax), நயனி (Canada), மானசி (Canada) ஆகியோரின் பெரிய தந்தையும் சாதுரியன், சாத்விகா, தீபிகா (Vancouver), ஹரிஷ் (Vancouver) ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2020 வெள்ளிக்கிழமை அன்று ஏறாவூரில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காலதாமதமான அறிவித்தலுக்கு மனம் வருந்துகின்றோம்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில்.
075 041 4872
075 530 1886
தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 – 06 – 1942



இறப்பு
19 – 10 – 2020

## இராசையா கனகரத்தினம்

### ( V.R.K மில் உரிமையாளர் )

பூநகரி, செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகரத்தினம் (V.R.K. மில் உரிமையாளர்) நேற்று (19.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெங்கடாச்சலம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் கௌசலாதேவியின் (மான்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, பரணிதரன், சிறிதரன் (சிங்கப்பூர்), அருட்செல்வி (இலண்டன்), கிரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகிர்தவதனா, கிரிஷா (சிங்கப்பூர்), ஜனார்த்தனி, அமிர்தலிங்கம் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பகீரதன், ரகுராம், ஸ்ரீராம் (சிங்கப்பூர்), ஸ்ரீவர்த்தன் (சிங்கப்பூர்), அபிநயா (இலண்டன்), அபிஷன் (இலண்டன்), அபிஷா (இலண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 2.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-551)

சட்டநாதர் சிவன் கோவிலடி,
நல்லூர்.
021 221 6179
தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

சங்கத்தினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை தலைமைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பிப்பதுடன் விண்ணப்பங்கள் 31.10.2020 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ தலைவர் / பொது முகாமையாளர் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், நாவலர்மடம், கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். வயதெல்லை 18 - 45 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பங்கள் உரிய கூட்டுறவுச் சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1) பதவி : எழுதுநர் (302/16)
சம்பள அளவுத்திட்டம் : 15135-120*10-135*10-17685

தகைமைகள்

கூட்டுறவுப் பணியாளர் (சா/த) சான்றிதழ் அல்லது க.பொ.த (சா/த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளம் தொடர்புபட்ட பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்ட பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

2) பதவி : கணக்கு பதிவாளர் (301/12)
சம்பள அளவுத்திட்டம் : 16780-150*10-165*10-19930

தகைமைகள்

கூட்டுறவுப் பணியாளர் (உ/த) சான்றிதழ் அல்லது க.பொ.த (உ/த) கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அலுவல்களில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கியல் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் தொடர்புபட்ட பதவியொன்னில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவாளர் நிறுவன இறுதிப் பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அலுவல்களில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சைச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அலுவல்களில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

3) பதவி : களஞ்சிய முகாமையாளர் (208/16)
சம்பள அளவுத்திட்டம் : 15135-120*10-135*10-17685

தகைமைகள்


க.பொ.த (சா/த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பளம் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட துறைப் பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

(C-552)

**தலைவர், கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**



# பௌத்த சங்கத்தின் அனுமதி இல்லாமல் 20 ஐ கொண்டு வந்தால் விளைவு மோசமாகும்

## எச்சரிக்கை விடுக்கும் தேரர்

**(கொழும்பு)**

**பௌத்த சங்கத்தினரின் அனுமதியின்றி, அவர்களைப் புறக்கணித்து விட்டு, 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்ற தயாராகினால், அதற்குப் பதிலளிக்க பௌத்த மகா சங்க சபையினர் தயாராக இருப்பதாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நாராஹேன்பிட்டி அபயராம விகாரையில் துறவிகள் குரல் அமைப்பு நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வராமல் இருப்பது மிகவும் நல்லது என நாங்கள் ஜனாதிபதிக்குக் கூறுகிறோம்.

20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமாயின் பௌத்த சங்க சபையினரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அப்படி செய்யாமல், சில அழுத்தங்கள், நெருக்கங்கள் மற்றும் சண்டித்தனமான செயல்கள் மூலம் 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்தால் நாங்கள் எப்போதும் இணங்கப் போவதில்லை.

20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள், பலவீனங்களை சரி செய்யுங்கள். ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை நீக்குங்கள். பௌத்த சங்க சபையினரை புறந்தள்ளி, அவர்களை தனிமைப்படுத்தி, அவர்களின் ஆலோசனைகளைப் பெறாது ஏதேனும் ஒன்றை கொண்டு வர தயாரானால், அனைத்துக்கும் பதிலளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்பதை இந்தத் தருணத்தில் நினைவூட்ட விரும்புகிறேன் எனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர் என்பவர் நீண்டகாலமாக ராஜபக்ஷவினரை ஆதரித்து வரும் பௌத்த பிக்கு என்பதுடன் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர், இந்த தேரரின் அபயராம விகாரையே மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் கேந்திர நிலையமாகச் செயற்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-7)

# கொரோனா வைரஸ் தொற்றுடன் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் சமூகத்தில் இருக்கலாம்

## பீதியைக் கிளப்புகிறார் நளின்

(கொழும்பு)

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் சமூகத்தில் காணப்படலாம். எனவே அரசாங்கம் தொற்றாளர்களை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர்.பரிசோதனைகளில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டி பிரதேசத்தில் வைத்தியசாலையில் சிசிச்சை பெற்றுவந்த பெண்ணொருவருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டதையடுத்து 12 வைத்தியர்கள் உள்ளிட்ட 43 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த வைத்தியசாலைக்கு அண்மையில் நானும் சென்றிருந்தேன்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள 12 வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கு அங்கு போதுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. வைத்தியசாலைக்கு வந்து சென்றோர் குறித்து தகவல்களைப் பெற்று அவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் அசமந்த போக்குடன் செயற்படுகிறது.

பி.சி.ஆர்.பிரிசோதனைகள் முறையாக முன்னெடுக்கப்படுவதில்லை. பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சரிடம் இவ்வா



றான விடயங்கள் குறித்து கேள்வியெழுப்பினால் அவர் பதில் கூற முடியாமல் தடுமாறுகின்றார். சபாநாயகர் சபையை ஒத்திவைக்கின்றார். அமைச்சர் பந்துல குணவர்தன பி.சி.ஆர்.பரிசோதனை செய்து கொண்டதாகக் கூறிய பின்னர் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆளுங்கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டத்திலுள்ள பலர் இடையில் சென்று விட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. பி.சி.ஆர்.பரிசோதனை குறித்து அரசாங்கத்திற்குள்ளேயே இவ்வாறான நிலைமை என்றால், பொதுமக்கள் மத்தியில் எந்த நிலையில் இருக்கும்?

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 1500 பேர் தொற்றுக்கு உள்ளாகியிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் 10 பேருடனாவது தொடர்புகளைப் பேணியிருப்பார்களாயின் 15,000 தொற்றாளர்கள் சமூகத்தில் இருப்பார்கள். அந்த 15,000 பேரில் ஒவ்வொருவரும் தலா 10 பேருடன் தொடர்பினைப் பேணியிருந்தால் சமூகத்தில் ஒரு இலட்சத்து 50,000 தொற்றாளர்களேனும் இருக்கக் கூடும்.

எனவே பி.சி.ஆர்.பரிசோதனைகளை முறையாக முன்னெடுத்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோருகின்றோம் என்றார். (நி-7)

# புதிய அரசியலமைப்பிற்காக மக்களின் கருத்துகளும் ஆலோசனைகளும் ஏற்கப்படும்

## நீதி அமைச்சு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பிற்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு நீதி அமைச்சு, பொது மக்களிடம் கருத்துகள் மற்றும் யோசனைகளை கோரியுள்ளது.

புதிய அரசியலமைப்பு சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காகக் கருத்துகளை முன்வைக்க விரும்பும் அனைவருக்கும் அதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கருத்துகளையும் யோசனைகளையும் முன்வைக்க முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் புதிய அரசியலமைப்பு சட்டமூலத்தை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் செயலாளருக்கு அவற்றை அனுப்பிவைக்க வேண்டும்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் 12 தலைப்புகளின் கீழ் கருத்துகளையும் யோசனைகளையும் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

01. அரசின் தன்மை
02. அடிப்படை உரிமை
03. மொழி
04. அரச கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கடமைகள்
05. நிறைவேற்றதிகாரம்
06. பாராளுமன்றம்
07. மக்கள் கருத்துக்கணிப்பு, வாக்குரிமை, தேர்தல்
08. அதிகார பரவலாக்கல், அதிகாரப் பகிர்வு
09. நீதித்துறை
10. அரச நிதி
11. பொதுமக்கள் பாதுகாப்பு
12. வேறு ஆர்வம் செலுத்தப்படுகின்ற துறைகளின் கீழ் மக்கள் கருத்துகளையும் யோசனைகளையும் முன்வைக்க முடியும்.

சுருக்கமான கருத்துகளையும் யோசனைகளையும் நிபுணர் குழு வரவேற்பதாகவும் நீதி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் தமது கருத்துகள் மற்றும் யோசனைகளை பதிவுத் தபால் மற்றும் expertscommpublic@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்க முடியும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 'கௌரவ' அடைமொழி எதற்கு?

(கொழும்பு)



பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளை ஏன் கௌரவ உறுப்பினர்கள் என்று அழைக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊதியம் மற்றும் சிறப்புரிமைகளை பெறாது சுய விருப்பத்தின் பேரில் கடமையாற்றும் நபர்களையே கௌரவ என்ற அடைமொழியைக் கூறி அழைப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனால், ஊதியம் மற்றும் சிறப்புரிமைகளை பெறும் மக்களின் பணத்தில் பராமரிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை கௌரவ உறுப்பினர்கள் என அழைப்பது கேள்விக்குரியது எனவும் அந்த வார்த்தையை தான் விரும்பவில்லை எனவும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே

## சான்றுப்படுத்துகிறார் வரலாற்றுத்துறை பேராசிரியர் புஸ்பரட்ணம்



**(கொழும்பு)**

**நாட்டின் வடபகுதியில் நாக வழிபாட்டை குல மரபுத் தெய்வ வழிபாடாக மக்கள் கொண்டிருந்தமை தொடர்பிலான தொல்லியல் ஆதாரங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை, தொல்லியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில், நாக பாம்பை பானையில் வைத்து வழிபாடுகளை செய்தமைக்கான ஆதாரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மக்களிடையே நாகத்தை பானைகளில் வைத்து வழிபாடு செய்த தொன்மையான வரலாறு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாகங்கள் பூமிக்குள் இருந்து வந்து, மீண்டும் பூமிக்குள் மறைந்து போவதனால், ஆதிகாலத்து மக்கள் அவற்றை மண் புற்றுக்குள் வைத்து வழிபாடுகளை நடத்தியுள்ளமைக்கான சான்றுகளும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டுக்கரை மற்றும் நாகபடுவான் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது இந்த விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆதாரங்களின் ஊடாக வட இலங்கை மக்கள், நாக வழிபாட்டை குல வழிபாடாக கொண்டிருந்தமை உறுதிப்படுத்தப்படுவதாகவும் கூறியுள்ளார்.

கிளிநொச்சி - பூநகரி பகுதியிலுள்ள முழங்காவில் நகருக்கு அண்மையிலேயே இந்த பகுதிகளில் அமையப்பெற்றுள்ளன.



நாகபடுவான் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நாக வழிபாட்டு சான்றுகளில் சில, தெற்காசிய நாடுகளில் இதுவரை கிடைக்கவில்லை எனப் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

நாகபடுவான் என்ற பெயரில் நாகம் இருப்பதுடன், படுவம், படுவான் என்றால் ஆழமான குளம் அல்லது பெரிய குளம் என பொருட்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

இதன்படி, நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இந்த ஊரின் பெயர் மாற்றம் பெறாது, பண்டைய தமிழ்ச் சொல்லிலேயே நாகபடுவான் என அழைக்கப்படுவதாக அவர் விளக்கமளித்துள்ளார்.

குறித்த இடத்திலிருந்து ஆதிகால பண்பாட்டுச் சின்னங்கள், சுடுமண்ணிலான நாகச் சின்னங்கள், பீடத்துடன் கூடிய நாகம், நாகினி சிலைகள், சிற்பங்கள், நாக கற்கள் உள்ளிட்ட பழைமை வாய்ந்த அடையாள சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆதாரங்கள், ஆதிகால மக்கள் நாகத்தை தமது குலமரபுச் சின்னமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், நாகச் சிற்பத்தை பானையில் வைத்து வழிபட்டமைக்கான சான்றுகள் தொல்லியல் அறிஞர்களுக்கு புதிய விடயங்களாக உள்ளது என்பதை அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அகழ்வு குழியொன்றிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட, அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பெரிய பானை, மண்ணில் புதைக்கப்பட்டு, அதன் மேற்பகுதியில் பாம்பு வந்து போவதற்கான வாய்ப் பகுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அந்தப் பானையைச் சுற்றி மூடிய நிலையில் பாம்புப் புற்றை அடையாளப்படுத்தும் 4 சிறு கலசங்களும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பானையிலிருந்து மண் அகற்றப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட போது, நாக பாம்பின் சிலை பானையால் மூடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவற்றில் அமர்ந்துள்ள தெய்வங்களின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது.

நான்காவது திசையில் மண் சட்டிகளின் விளிம்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வட்டமாகக் காணப்படுகின்றது.

இந்த ஆதாரங்கள் பாம்பு புற்று வழிபாடு தோன்றுவதற்கு முன்னோடியாக ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோன்றிய தொன்மையான வழிபாட்டு மரபு எனக் கூறலாம் என பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன், ஒன்றுக்கு மேற்பட்ட நாக வடிவங்கள், மண் சட்டிகளில் வைக்கப்பட்டமைக்கான ஆதாரங்களும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பண்டைய இலங்கையில் நாக இன மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங்களில் காணப்பட்டாலும், அது இலங்கையில் ஒரு பிராந்தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வந்ததற்கு தற்காலத்தில் வட இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக் குழுவோடு தோன்றி வளர்ந்ததையே கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றது என பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார். (ஜ-4)

# ஐ.தே.க.தேசியப் பட்டியல் உறுப்பினராக அகிலவிராஜ்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசத்தை நியமிப்பது குறித்து கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டிய சிலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் இளம் தலைவர் ஒருவரை அந்த பதவிக்கு நியமிக்க வேண்டும் என்பது கட்சியின் தலைவரது நிலைப்பாடாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்துள்ள தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்றுக்கொள்ள தான் தயாரில்லை என ரணில் விக்ரமசிங்க அண்மையில் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் சம்பந்தமாக தீர்மானிக்க கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று கட்சியின் தலைமையகத்தில் கூடி கலந்துரையாட உள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியை சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற



உறுப்பினர் பதவி மாத்திரமே கிடைத்தது. தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களுக்கும் மேல் கடந்துள்ள நிலையில் இதுவரை எவரும் அந்த பதவிக்கு நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## எவ்வித அறிகுறியும் இன்றிய தொற்றாளர்கள் தற்போதைய நிலைமை மிக மோசமானது -வைத்தியர் ஹரித-

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றின் முதல் அலைகளை விட தற்போதைய நிலைமை மிகவும் மோசமானதென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே எச்சரித்துள்ளார்.

நாட்டில் தீவிரமாக பரவி வரும் கொரோனா தொற்று தொடர்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், கடந்த வாரங்களில் பதிவான இரண்டாயிரத்து 100 கொரோனா தொற்றாளர்களுக்கு எந்தவித அறிகுறியும் காட்டவில்லை.

இதனால் மருத்துவர்கள் மத்தியில் பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவி வருகிறது.

இந்நிலையில், கொரோனாத் தொற்று உறுதியாகிய நோயாளிகளை அறிகுறியற்ற நோயாளிகள், சிறிய அறிகுறிகளுடன் கூடிய நோயாளிகள் மற்றும் சுகாதார பிரச்சினைகள் உள்ள நோயாளிகள் என வகைப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டால், அதிகாரிகள் மூன்று நிலை சிகிச்சையை மட்டுமே நிர்வகிக்க வேண்டியிருக்கும் என்றும் வைத்தியசாலை இடவசதிகள் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-7)

# கொரோனா மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ள இடம் தொடர்பில் மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்

(முறிகண்டி)

கொரோனா மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ள இடம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு கிருஷ்ணபுரம்பொது அமைப்புக்கள் கூட்டாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மூலமாக கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

19.10.2020 திகதியிடப்பட்டு குறித்த கடிதம் கையளிக்கப் பட்டுள்ளது. கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் குறித்த கொரோனா வைத்தியசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது தொடர்பில் இராணுவத் தளபதி அறிவித்திருந்த நிலையில் குறித்த கடிதம் கையளிக் கப் பட்டுள்ளது. அக்கடிதத்தில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது கிராமத்தில் பல்வேறு இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அதாவது 1977, 1983 காலப் பகுதியில் நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியேறி பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ளவர்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர்.

எமது கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள நவம் அறிவுக்கூடம் என்று அன்றைய காலத்தில் 12 ஏக்கர் காணியில் இயங்கி வந்த கட்டடத் தொகுதி பின்னர் இராணுவப் பயிற்சி முகாமாக இயங்கி வந்தது. குறித்த பகுதி சிறிது நாட்களிற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திடம் கையளிக் கப்பட்டிருந்தது.

குறித்த பாடசாலையில் 80 மாணவர்கள் வரையில் கல்வி கற்கும் அதே நேரம் ஆசிரியர்கள் உட்பட 100பேர் அங்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலகம் போன்றவற்றில் நாளாந்தம் 100 இற்கு மேற்பட்ட மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்வது வழக்கமான இடமாகவும் அமைந்துள்ளது. எமது கிராமத்தின் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகள் இடம் பெறும் மிக முக்கிய மையப் புள்ளியாகவும் குறித்த பகுதி காணப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது கொரோனா மத்திய நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையிட்டு எமது கிராமமக்கள் பெரும் பயப் பீதிக்குள்ளாகியுள்ளனர்.

எனவே குறித்த நிலையத்தை இங்கு அமைப்பது தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.(ஜ-4-5-100)

# வளரும் பயிரை முளையிலே தெரியும்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சிமன்ற பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் வழிநடத்தலில் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களை சேகரித்து மீள்உருவாக்கல் நிலையத்தில் மாணவர்கள் ஒப்படைத்துள்ளனர்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் உக்காத கழிவுப் பொருட்கள் மீளுருவாக்கல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை சாவகச்சேரி நகராட்சிமன்ற பொதுச்சுகாதார பரிசோதகர் பி.தளிர்றாஜ் மேற்கொண்டு வருகின்றார்.

இந் நிலையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி தரம் 6 மாணவன் ந.அபர்ணன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தரம் 5 மாணவன் அ.கரிஷ் ஆகியோர் இணைந்து தமது வீட்டுச் சுற்றாடலில் சேகரித்த பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை மீளுருவாக்கல் நிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கையளித்தனர். (ஜ-4)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

15ம் ஆண்டு நினைவஞ்சலி | 5ம் ஆண்டு நினைவஞ்சலி | 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 - 05 - 1925



விண்ணில் 06 - 09 - 2005

அமரர் திரு. **திருஞானசம்பந்தன் பத்மநாதன் [பத்தண்ணன்]**

(முன்னாள் வர்த்தகர், இயக்குநர், செயலாளர், நொத்தாரிசு கிளார்க் மத்தியகுழு உறுப்பினர், எழுதுவினைஞர், பாடகர் (பண்ணிசை மெல்லிசை)

அன்னை மடியில் 13 - 09 - 1941



ஆண்டவன் அடியில் 01 - 04 - 2015

அமரர் திருமதி. **மகேஸ்வரி [தங்கம்மா] பத்மநாதன்**

மலர்வு 29 - 09 - 1964



உதிர்வு 15 - 11 - 2015

அமரர் திருமதி. **ஜெயகௌரி [கௌரி] ஜெயக்குமாரன்**

தாயில் சிறந்த தொரு கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
மனைவி அமைவதெல்லாம் கடவுள் கொடுத்த வரம்
ஏன் தரணியிலுமில்லை என்பதனை உங்கள் செயலால் நாமறிந்தோம்
கடல் ஆழ்ந்த உலகில் கண்கண்ட தெய்வம் நீங்கள் மூவரும்
உடலோடும் உயிரோடும் ஒட்டி உறவாடிய நீங்கள்
உபகாரம் கருதாமல் உதவிபுரியும் கருமபீடம் நீங்கள்
உணர்வுக்கு உணர்வாகவும் உயிருக்குயிராகவும் இருந்த நீங்கள்
கடல் அலைகள் ஓய்ந்தாலும் ஆனால் கதை சொல்லும்
கடல் பொங்கினாலும் ஆனால் கவிதை பாடும்
மண் தாங்கா விட்டாலும் ஆனால் மண் சிவக்கும்
உங்கள் இலட்சிய பயணம் வெகுதூரத்தில் இல்லை
தாய்க்குத் தாயாகவும் தந்தைக்கு தந்தையாகவும் இருந்த நீங்கள்
மனைவிக்கு மனைவியாகவும் இருந்த நீங்கள்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் நீங்கள் மூவரும்
பிறப்புண்டானால் இறப்புண்டு என்பதனை புரிய வைத்த நீங்கள்
அன்று கறையான் புத்தெடுத்து இன்று பாம்பு குடிபுகுந்தது உங்கள் இடத்தில்
நீங்கள் போனாலும் போனீர்கள் நிம்மதியும் தொலைந்து போனதே உங்களுடன்
மரணித்து விட்ட உங்களது உறவின் நீங்காத நினைவுகளும்
உதிர்ந்து விட்ட உங்கள் அன்பின் உலராத வாசனையும்
வாழ்வே மாயம் இந்த வாழ்வே மாயம்
தரைமீது காணும் யாவும் தண்ணீரில் போடும் கோலம் நிலைக்காதம்மா
யாரோடு யார் வந்தது நாம் போகும் போது
யாரோடு யார் செல்வது? யாரார்க்கு என்ன வேஷமோ

**சிரார்த்த திதி**
**20.10.2020**
**(ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி**
**செவ்வாய்க்கிழமை**
**பூர்வபக்க சதுர்த்தி)**



இங்கே யார்க்கு எந்த மேடையோ? ஆடும் வரை கூட்டம் வரும்
ஆட்டம் நின்றால் ஓட்டம் பெறும்! தாயாலே வந்தது
தீயாலே வெந்தது மெய்யென்று மேனியை யார் சொன்னது.
பிறந்தாலும் பாலை ஊற்றுவார் இங்கே இறந்தாலும்
பாலை ஊற்றுவார் உண்டாவது இரண்டால தான்
ஊர் போவது நாலால தான் கருவோடு வந்தது
தெருவோடு போனது மெய்யென்று மேனியை
யார் சொன்னது? நாடகம் விடும் நேரம் தான்
உச்சக்காட்சி நடக்குதம்மா வேஷம் கலைக்கவும்
ஓய்வு எடுக்கவும் வேளை நெருங்குதம்மா
பாதைகள் பல மாறியே வந்த பயணம் முடியுதம்மா
தாய் கொண்டு வந்ததை தாலாட்டி வைத்ததை
நோய் கொண்டு போகும் நேரமம்மா
ஆண்டுகள் பலகோடி போனாலும் எமை விட்டு
அகலாது பசுமையான நினைவுகள் உங்கள்
வாழ்க்கை வாழ்வதற்கல்ல வாழ்க்கையொரு
போராட்டம் என்பதனை புரிய வைத்த நீங்கள்
எல்லாம் வல்ல ஆண்டவனை உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று
அதிகாரம்:-60 குறள்:- 591

(40139)

**கீரிமலை ஆயில் நின்றொல்லை,**
**துன்னாலை வடக்கு,**
**கரவெட்டி புலோலி.**

**உங்கள் பிரிவால் வாடும்: (பாசமிகு கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,சகோதரர்கள், மருமக்கள், மைத்துனர்மார், உற்றார்,உறவினர்.**

# மருதங்கேணி வைத்தியசாலை மருத்துவக் குழுவிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை கொரோனா மருத்துவக்குழுவிடம் உத்தியோகபூர்வமாக நேற்று கையளிக்கப்பட்டது.

நாடுமுழுவதும் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகமாக இனம்காணப்பட்டு வரும் நிலையில் கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையங்களை




புதிதாக ஏற்படுத்தும் அரசின் நடவடிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைவாக கொரோனாத் தொற்று உறுதியானவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு ஏற்றவகையில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை தயார் படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் பாதுகாப்பு நடவடிக்கைக்காக அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (5-4-6)

# குருதிக் கொடையாளர்களுக்கு...


(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுக்கு வருகை தரும் குருதிக் கொடையாளர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மேற்படி வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுக்கு முன்பாக காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

அதில், ஒரு மாத காலத்திற்குள் காய்ச்சல், தடிமன், மூச்சுத் திணறல் உங்களுக்கு ஏற்பட்டிருப்பின், ஒரு மாத காலத்திற்குள் காய்ச்சல், தடிமன், மூச்சுத் திணறல் ஏற்பட்டவர்கள் உங்கள் வீட்டில் இருப்பின், ஒரு மாத காலத்திற்குள் வெளிநாடு சென்று வந்தவர்கள் உங்கள் வீட்டிலோ அல்லது நெருங்கிய நண்பர்கள், அயலவர்கள் இருப்பின் தயவு செய்து இரத்த வங்கியின் உள்ளே பிரவேசிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள் என அவ் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# வளன்புர மக்களுடன் யாழ்.மாநகர முதல்வர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வளன்புரம் பகுதியில் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டுள்ள வீடுகள், கட்டுமானங்கள் மற்றும் வீதி எல்லைகளில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள சுற்றுமதில் தொடர்பில் விசேட சந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் வளன்புரம் பகுதியில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் குறித்த கிராமத்தில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு முறையான அனுமதியை மாநகர சபையில் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து முதல்வர் மற்றும் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

மேலும் வீதிகளின் எல்லைக்குள் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டுள்ள எல்லைச் சுவர்கள், வேலிகளை உடன் அகற்றுவதற்கு மக்களை தமது ஒத்துழைப்புக்களை வழங்குமாறும், வீதியை சிறந்த முறையில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அத்துடன் காணி உப பிரிவிடல், காணி கைமாற்றல் தொடர்பில் மாநகர சபையினதும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் உரிய நியமங்கள் பின்பற்றப்படாது பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அது குறித்து உரிய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு முறையான அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன.

அரச திணைக்களங்களின் சட்ட திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த வாழ்க்கையையும் சிறந்த சுகாதாரமான சுற்றுப்புறச் சூழலையும் ஏற்படுத்திக் கொடுக்க அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் முதல்வர் கேட்டுக் கொண்டார். அத்துடன் குறித்த பகுதிக்காக விசேட நடமாடும் சேவை ஒன்றை ஏற்பாடு செய்வதாகவும் அதில் ஒவ்வொருவரும் தமது வீடுகள் மற்றும் கட்டுமானங்களுக்கு உரிய விண்ணப்பங்களை மேற்கொண்டு அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களை கேட்டுக் கொண்டார்.

முதல்வரின் கருத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் தமது கிராம முன்னேற்றத்திற்காக தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உரிய அனுமதிகளைப் பெறுவதற்கு தயாராக இருப்பதாகவும் மாநகரின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்றும் தெரிவித்தனர். (5-4)




யாழ்ப்பாண பிரதேச செயலக அலுவலர்கள் தமது இரத்த அழுத்தம், உடல் திணிவு சுட்டி BMI போன்றவற்றை தாமே பரிசோதிக்க தேவையான உபகரணங்களை யாழ். நீரிழிவு கழகம் யாழ். பிரதேச செயலரிடம் கையளித்தது.



"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியினரும் யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த விசேட இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலமாக கலை,மொழி சார்ந்த வகுப்புக்களை வருடந்தோறும் நடத்தி வருகின்றது. இதற்கமைவாக தென்மராட்சி பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2021 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், நாடகம் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய வகுப்புக்களைத் தொடர்ந்து நடத்தவுள்ளது.

இதற்கான ஆசிரியர்களை நியமிப்பதற்காகத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது முழுமையான சுயவிபரங்கள், கல்வி, கலைசார் தகைமைகள், தொலைபேசி இலக்கம் ஆகியன அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் தென்மராட்சி குடமியன், வரணி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் மேதிக தகவல்களுக்கு 077 669 6019 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தென்மராட்சி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஜெ.கிரிதரன் அறிவித்துள்ளார். (5)

# சிறுகதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய கருவினை உள்ளடக்கியதான சிறுகதைப் போட்டி சிறகுகள் அமையத்தினரால் நடத்தப்படவுள்ளது.

குறித்த போட்டியில் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் பங்குபற்றுவதுடன் சிறுகதை 400-500 சொற்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். சிறுகதைகளை 21/1A பாடசாலை வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவில் என்ற முகவரிக்கு அல்லது Sirakukalinfo@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்கவும். (5-4)

# மானிய உரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கைதடி,நாவற்குழி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கான மானிய உரம் வழங்கல் நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கைதடி கமநல சேவை நிலையத்தில் வழங்கப்படும்.

மானிய உரம் பெற வருவோர் உரிய ஆவணங்களுடன் வருமாறு கமக்கார அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (5-4)

# பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாகவும் பரீட்சைக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (5-4)

# ஹயஸ் மோதி முதியவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற ஹயஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதன் போது மோதிய ஹயஸ் வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்களால் கல் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் வாகனம் சேதமடைந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# பொது மக்களின் பிரச்சினைக்கு ஒன்லைன் முறையில் தீர்வு

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக பொதுமக்கள் தங்களின் தேவைக்காக நீதி அமைச்சுக்கு வருகை தருவதில் ஏற்படும் சிரமத்தை கருத்திற்கொண்டு அமைச்சின் பொது மக்கள் தினத்தை இணையவழி (ஒன்லைன்) முறைமையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் நேற்று திங்கட்கிழமை நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பொது மக்கள் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு தெரிவித்திருந்த தங்கள் பிரச்சினை மற்றும் பொது பிரச்சினைகளுக்கு இணையவழி (ஒன்லைன்) முறைமையிலேயே தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இதன்போது பொதுமக்கள் தங்களுக்கு முடியுமான பிரதான மூன்று மொழிகளிலும் அவர்களின் கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளை முன்வைத்திருந்தனர். இதன்போது மக்களின் தேவைகளுக்கு ஏற்ற தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சர் பெற்றுக் கொடுத்தார்.

எனவே எதிர்வரும் காலங்களிலும் பொது மக்கள் தங்களுக்கு நீதி அமைச்சு மூலம் தீர்த்துக்கொள்ள தேவையான பிரச்சினைகள் மற்றும் வேறு முறைப்பாடுகள் இருக்குமாயின், https://bit.ly/3lIBFgq என்ற இணையத்தள குறியீட்டுக்கு சென்று பதிவு செய்து கொண்டு. தங்களின் பிரச்சினைகளை முன்வைக்கலாம்.



அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சரின் தலைமையில் திங்கட்கிழமைகளில் இடம்பெறும் பொது மக்கள் தினத்தில் இணையவழி (ஒன்லைன்) ஊடாக தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். முறைப்பாடு மற்றும் பிரச்சினைகளை பொது மக்கள் வெள்ளிக்கிழமைக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என நீதி அமைச்சு அறிவித்துள்ளது. (ஜ-4)

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த மக்கள் வேண்டுகோள்

(தருமபுரம்)

பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள வரட்சியாலும் வயல்களிலுள்ள பயிர்கள் அழிந்துவரும் நிலையில் கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும், இது வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை.

அடுத்து பின்னர் கமக்கார அமைப்புகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-316)






அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல் வடிவம்

வடக்கின் விவசாயப் புரட்சி

North Lanka IIT City Campus
Faculty of Agriculture

Agriculture Research உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய Modern Research Farm
Kariyalai Nakapaduvaan, Poonakary.

Proposed by – S.A.Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT City Campus
Faculty of Agriculture

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat
Poonakary
Kilinochchi.

Location –
Kariyalai Nakapaduvaan
Poonakary Divisional



NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.

UGC அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்

கற்கைநெறி ஆரம்பம்
23.10.2020

தகமை - NVQ Level 04 / O/L / A/L


Duration: 03 Years முழுநேரப் பயிற்சி

விண்ணப்ப முடிவுத் திகதி: 22.10.2020

தொடர்புகளுக்கு: 076 7504535, 077 8849677, 077 8657957

பதிவுகளுக்கு ➡ தலைமைக்காரியாலயம்: Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.


## '800' இலிருந்து விலகிக் கொள்ளுங்கள் முரளிதரன் மன்றாட்டம்



(கொழும்பு)

தன்னுடைய வரலாற்றை சித்திரிக்கும் திரைப்படத்திலிருந்து நடிகர் விஜய் சேதுபதியை விலகிக்கொள்ளுமாறு இலங்கையின் முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் வெளியாகி வரும் எதிர்ப்பலைகளை அடுத்து முரளிதரன் குறித்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.

"தமிழ் நாட்டின் ஒரு தலை சிறந்த கலைஞன் பாதிப்படைவதை நான் விரும்பவில்லை.

விஜய் சேதுபதியின் கலைப் பயணத்தில் வருங்காலங்களில் தேவையற்ற தடைகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதையும் கருத்தில் கொண்டு திரைப்படத்தில் இருந்து விலகிக் கொள்ளுமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்" என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஜ-4)


இன்று 20.10.2020 சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்...

29 ஆண்டுகள் எனது ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...



கண்ணைக் கொத்திய காக்காப் பிள்ளையாரே!
இன்னும் பார்த்துக் கொண்டிருந்தால் நாம் என்னாவது!

ஈசுர விநாயகரிடம் மனுத்தக்கல் செய்தமை (08.11.1991)
அன்றைய மனுவின் முக்கிய கோரிக்கைகளாவன,

1.கொழும்பு அரசியல் சூறாவளி

2.இடைக்கால சமாதான அரசியல் தீர்வு

3.இடம்பெயர்ந்து அலைந்து திரியும் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

(4418)

ஆன்மீகப் போராட்ட 29 ஆம் வருட பூர்த்தி
விசேஷ பூசை வழிபாடுகள்

காலம் :- 20.10.2020 செவ்வாய் விநாயகர் சதுர்த்தி

நேரம் :- பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி விசேட பூஜை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.

ஐயாவின் நீண்ட நாள் கோரிக்கைகளை
நிறைவேற்றிட இன்று எழுந்திடுவீர்
அருள் தந்திடுவீர் சர்வ வல்லமை பொருந்திய
ஈசுர விநாயகரே! உம் திருப்பாதம்
போற்றி! போற்றி!! போற்றி!!!

சோழியூரான் - பிறைசூடிக்குரு
ஆலய பரிபாலகரும் சந்ததிப் பூசகரும் மனுதாரர்.

# காலபோக செய்கை தொடர்பான விவசாயக் குழுக்கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் கட்டுக்கரை குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கால போக நெற்செய்கை தொடர் பான விவசாய குழுக்கூட்டம் மன்னார் மாவட்ட பதில் அர சாங்க அதிபர் எஸ்.குணபா லன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மன் னார் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தும் வகையில் மேற் கொள்ளவேண்டிய நடவடிக் கைகள் மற்றும் விவசாய செய் கைகளை பாதிக்கும் கிருமிகள் மற்றும் தத்துக்கிளி தாக்கம் தொடர்பாக விவசாய ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளரும் கால்நடை, மேய்ச்சல் தரை வைகள் மற்றும் கால்நடை களுக்கு ஏற்படும் கால்வாய் நோய் மற்றும் ஏனைய நோய் களை கட்டுப்படுத்துவது தொடர் பாக கால்நடை அபிவிருத்தி பணிப்பாளரும் விளக்கமளித் தனர்.

அத்துடன் தரமான விதை களின் பயன்பாடு தொடர்பாக வும் விதை ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளராலும் விவசா யிகளுக்கு அறிவுறுத்தப்பட் டது.

இக்கூட்டத்தில் விவசாய திணைக்களத்தின் கீழ் செயற் படும் அலுவலகங்களின் உத விப்பணிப்பாளர்கள், உயர் அதி காரிகள் மற்றும் பிரதேச செய லாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண் டனர்.

இம்முறை கட்டுக்கரை குள த்தில் 10 ஆயிரத்து 900 கன அடி நீர் காணப்படுவதனால் இக்குளத்தின் கீழ் 24 ஆயிர த்து 438 ஏக்கர் விவசாயப் பயிர் செய்கை மேற்கொள்வ தற்கான தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (5-4-285)

# வவுனியா வைத்தியசாலையில் சமூகத் தொற்று இல்லை

**- பணிப்பாளர் -**

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலை யில் கொவிட்-19 சமூக பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என வைத்தியசாலை யின் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமார் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பூந் தோட்டம் தனிமைப்படுத்தல் மையத்தில் கொரோனோத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டவர்கள் உரிய பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றி வவு னியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டனர்.

அதன் மூலம் சமூக பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

தொற்று நீக்கல் செயற்பாட் டிற்காகவே வைத்தியசாலை பிரதான வாயில் மூடப்பட்டுள் ளது. ஏனைய சிகிச்சை செய ற்பாடுகள் வழமைபோல நடை பெற்று வருகின்றன.

ஊழியர்கள் பயணிக்கும் மற்றைய வாயில் வழியாக நோயாளர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளே அனுமதிக்கப் படுகின்றனர்.

எனினும் பொது மக்கள் முன் எச்சரிக்கையுடன் இருப் பது நல்லது எனவும் தெரிவித் தார். (5-4-299)

# காஞ்சிரமோட்டை மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்

**திலீபன்**



(நெளுக்குளம்)

வவுனியா காஞ்சிரமோட்டை கிராம மக்கள் எதிர்கொண்டு வந்த பிரச்சினைகளுக்கு காணி அமைச்சருடன் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலில் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பி னர் கு.திலீபன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததா வது.

வவுனியா காஞ்சிரமோட்டை கிராமமக்கள் மீள்குடியேறிய நிலையில் வனவளத்திணைக் களத்தினால் பல்வேறு இன்ன ல்களுக்கு முகம் கொடுத்து வரு வதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதன் பிரகாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு குறித்த விடயம் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்டு அவர் ஊடாக நேற்று காணி அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவு டன் விசேட கலந்துரையடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் அம்மக்க ளுக்கான மின்சாரத்தினை கொண்டு செல்வதில் வன வளத்திணைக்களத்தால் ஏற் படுத்தப்படும் தடைகள் குறித்து தெரிவிக்கப்பட்டதையடுத்து உடனடியாக வன இலாகா திணைக்களத்தின் பணிப்பா ளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு இம் மக்களுக்கான மின்சாரத்தினை வழங்குவ தற்கு ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி மின்சாரத்தினை வழ ங்க ஏதுவான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளு மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அம்மக்கள் தொட ர்ச்சியாக யானைப் பிரச்சினை க்கு முகம் கொடுத்து வருவத னால் யானை வேலி அமைப் பதற்கான ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. எனவே மிக விரைவில் அம்மக்களின் நிம்மதியான வாழ்க்கைக்கு ஏதுவான வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (5-4-299)

# பரீட்சை முடிந்து வீடு திரும்பிய மாணவி விபத்தில் சிக்கி காயம்

(சாவகச்சேரி)

க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதி விட்டு வீடு நோக்கி புறப்பட்ட மாணவி ஒருவர் நேற்று திங் கட்கிழமை மதியம் வீதி விப த்தில் சிக்கி காயமடைந்துள் ளார்.

மீசாலை -புத்தூர் சந்திப் பகுதியில் வீதியைக் கடந்த மாணவியை ஹன்டர் ரக வாகனம் மோதியுள்ளது.

இதில் அல்லாரை வடக்கு பகுதியைச் சேர்ந்த ப.ருக்சிகா என்ற மாணவியே காயம டைந்த நிலையில் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு பின் னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (5-4-30)

# வீடுகள் கையளிக்கப்பட்டன




(யாழ்ப்பாணம்)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இராணுவத்தால் அமைக்கப் பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று இடம்பெற் றன.

உடுவில், கொடிகாமம், வல்லி புரம் மற்றும் நெல்லியடி ஆகிய பகுதிகளில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடுகளை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேனரத் பண் டார பயனாளிகளிடம் கையளி த்தார்.

இந்நிகழ்வில், யாழ்.மாவ ட்ட இராணுவத் தளபதியு டன், கட்டளைத் தளபதிகள் மற்றும் உதவி வழங்குநர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (5-4-33-101)




**யாழில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நிமலராஜனின் திருவுருவ படத்திற்கு அவரது சகோதரன் சுடரேற்றினார். (படம்:- சிவசாந்தன்)**

# இராசிபலன்

20.10.2020
ஐப்பசி 04, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 5.09 மணிவரை
அனுசம் முற்பகல் 9.42 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம்:- பரணி
சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்**: கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, யோசித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**ரிஷபம்**: புதிய முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் தொல்லைகள் குறையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: வியாபார விருத்தியுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்**: தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**சிம்மம்**: இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**கன்னி**: உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**துலாம்**: பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பு உயரும் நாள்.

**விருச்சிகம்**: விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**: கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**மகரம்**: வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், கௌரவமான நாள்.

**கும்பம்**: என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மீனம்**: தடைகள் விலகி தனவரவு கிடைக்கும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு.

பாறையைக்கூட பிளக்கும் ஆற்றல் உயிருள்ள வேருக்கு உண்டு.



# கிணற்றில் விழுந்து 3 சிறுவர்கள் பலி



(கொழும்பு)

கலேவல, ரன்வெதியாவ பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் வயலுக்கு நீர் இறைப்பதற்காகத் தோண்டப்பட்டிருந்த கிணற்றில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை முதல் காணாமல் போயிருந்த நிலையில் குறித்த மூன்று சிறுவர்களும் அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

12 மற்றும் 15 வயதுடைய சிறுமிகள் இருவரும் 7 வயதுடைய சிறுவன் ஒருவனுமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கலேவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# 20 இல் குறையிருந்தால் திருத்தலாம்

## கைவிடமுடியாது என்கிறார் ரத்நாயக்க

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தில் குறைகள் இருந்தால் அவை சரிசெய்யப்படும். ஒருபோதும் அந்நடவடிக்கையை கைவிடமுடியாது என அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற நிலையை உருவாக்குவதற்காகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேறிய பின்னர், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா - டயகம பகுதியில் நேற்று நடைபெற்ற வீதிப் புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆவது திருத்தச்சட்டமூலம் இல்லாதொழிக்கப்படும் என ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது அறிவிக்கப்பட்டது. தற்போது அதனை செய்ய முற்படும்போது எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. 20 இல் குறைகள் இருந்தால் அவற்றை சரி செய்யலாம். ஆனால், அந்நடவடிக்கையை கைவிடமுடியாது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# நியூசிலாந்தின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி கோட்டா வாழ்த்து



(கொழும்பு)

நியூசிலாந்து பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று பிரதமராக தெரிவான ஜெசிந்தா ஆர்டனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டரில் நேற்று திங்கட்கிழமை பதிவிட்டுள்ள ஜனாதிபதி, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் அவரின் தலைமைத்துவம் முன்மாதிரியாக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தற்போதைய பிரதமரான ஜெசிந்தா ஆர்டனின் ஆளும் தொழிலாளர் கட்சி 49 வீத வாக்குகளைப் பெற்று அபார வெற்றி பெற்றது. பிரதான எதிர்க்கட்சியான தேசியக் கட்சி 27 வீத வாக்குகளை மட்டுமே பெற்றது.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் மொத்தமுள்ள 120 இடங்களில் 64 இடங்களை ஜெசிந்தாவின் ஆளும் கட்சி கைப்பற்றியுள்ளது.



இதேவேளை, நியூசிலாந்தின் பிரதமராக இரண்டாவது முறையாகப் பதவியேற்கவுள்ள ஜெசிந்தாவுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# எம்.பிக்களுக்கும் பி.சி.ஆர்.சோதனை

(கொழும்பு)

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் பி.சி.ஆர். சோதனைகளை நடத்தி, பொது பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு எதிர்க்கட்சி அரசாங்கத்தையும் சபாநாயகரையும் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

# அமர்வுகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இந்த வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனாப் பரவல் நிலையை கருத்திற்கொண்டு கோப் குழு தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் மற்றும் கோபா குழு தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் இந்த



முடிவை எடுத்துள்ளனர்.

இன்று முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்ட கோபா மற்றும் கோப் குழு அமர்வுகள் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

14



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**வாக்கெண்ணும் மூன்றாம் கட்டம்:-**

ஒவ்வொரு வேட்பாளர்களும் பெற்றுள்ள விருப்புக்களை எண்ணல் மூன்றாம் கட்டத்தில் மேற்கொள்ளப்படும். விருப்பு வாக்குகளை பல்வேறு வகையாகப்பிரிக்கலாம். அவை யாவன.

1) விருப்பு ஒருவருக்கு மட்டும் அடையாளமிடப்பட்டவை. அதாவது விருப்பு 1 ஐ உடையவை—**P1**

2) விருப்புகள் இருவருக்கு அடையாளமிடப்பட்டவை. அதாவது விருப்பு 2 ஐ உடையவை—**P2**

3) விருப்புகள் மூவருக்கு அடையாளமிடப்பட்டவை. அதாவது விருப்பு 3 ஐ உடையவை—**P3**

4) விருப்புகள் மூவருக்கு கூடுதலாக அடையாளமிடப்பட்டவை. அதாவது (4 விருப்புகள் அல்லது அதனிலும் கூடியவை) —**P>4**

5) விருப்புக்கள் எதுவும் அடையாளமிடப்படாதவை – **NoP**

6) விருப்புக்கள் யாருக்கு அடையாளமிடப்பட்டது என்பதை தீர்மானிக்க முடியாத நிச்சயமற்றவை.

இவ்வாறு 6 வகையான வாக்குகளையும் தெரிவு செய்து அவற்றை இடுவதற்கு 6 பெட்டிகள் தயாரிக்கப்படும். விருப்பெண்ணல் கட்சி ரீதியாக மேற்கொள்ளப்படும். இவ்வெண்ணல் ஆகக்கூடுதலான வாக்குகள் எண்ணிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டுள்ள கட்சி/சுயேட்சைக் குழுவிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

**வாக்குச் சீட்டுக்களை வகைப் படுத்தல்**

1) கூடுதலான வாக்குத்தொகையைப் பெற்றுக்கொண்ட கட்சியின் வாக்குச் சீட்டுக்களை முதலில் வெளியே எடுத்து வாக்கெண்ணும் பணியாட் தொகுதியினருக்கு 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டொன்று வீதம் பிரித்துக் கொடுக்கப்படும். முதலில் பணியாட் தொகுதியினர் அனைவரும் இணைந்து இவ்வாக்குச் சீட்டுக்களை ஒவ்வொன்றாகத் தெரிவு செய்து ஒருவருக்கு மட்டும் அடையாளமிடப்பட்டவையை **P1** பெட்டியிலும் இருவருக்கு அடையாளமிடப்பட்டவையை **P2** பெட்டியிலும் மூவருக்கு அடையாளமிடப்பட்டவையை **P3** பெட்டியிலும் மூவருக்கு கூடுதலாக அடையாளமிடப்பட்டவையை அதாவது (4 விருப்புகள் அல்லது அதனிலும் கூடியவயை) **P>4** பெட்டியிலும் விருப்புக்கள் எதுவும் அடையாளமிடப்படாதவையை **NoP** பெட்டியிலும் விருப்புக்கள் யாருக்கு அடையாளமிடப்பட்டது என்பதை தீர்மானிக்க முடியாத நிச்சயமற்றவையை **PVoid** பெட்டியிலும் இடுவார்கள்.

2) சந்தேகத்திற்குரிய வாக்குகளுக்கான **(Pvoid)** பெட்டியில் இடப்படுகின்ற வாக்குச் சீட்டுக்களை பிரதம வாக்கெண்ணும் அலுவலர் பரீட்சித்துப் பார்த்து அவ்வாக்குச் சீட்டுகள் 1 விருப்பு, 2 விருப்புக்கள் அல்லது 3 விருப்புகள் கொண்ட வாக்குச் சீட்டுக்களாக ஊகிக்கப்படக் கூடியவையா? அல்லது வாக்கெண்ணும் போது முழுமையாக நிராகரிக்கப்படக் கூடியவையா? என்பது தீர்மானிக்கப்படும்.

**50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டுகளாகக் கட்டலும் தொடரிலக்கங்கள் இடலும்**

3) போதுமானளவு வாக்குச் சீட்டுக்கள் மேற்குறித்தவாறு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் 1 விருப்பு, 2 விருப்புக்கள், 3 விருப்புகளாக உள்ள வாக்குச் சீட்டுக்கள் வெவ்வேறாக 50 ஐக் கொண்ட கட்டுகளாகக் கட்டப்படும்.


4) இதன் பின்னர் கட்டுகளாகக் கட்டப்பட்ட 50 வாக்குச் சீட்டுகளுடன் கூடிய ஒவ்வொரு கட்டிலுமுள்ள வாக்குச் சீட்டுக்கள் விருப்புக்கள் உரியவாறு விருப்பு 1,2 அல்லது 3 என்பவற்றைக்கொண்டவை எனவும் வாக்குச் சீட்டுகள் 50 காணப்படுகின்றனவெனவும் பரிசீலிப்பதற்கு தனியான ஒரு குழு நியமிக்கப்படும்.

5) 1 விருப்பு கொண்ட கட்டுக்கள், 2 விருப்புக்கள் கொண்ட கட்டுக்கள், 3 விருப்புக்கள் கொண்ட கட்டுக்கள் என்பவற்றை வெவ்வேறாக வரிசைக் கிரமத்தில் வைத்துக் கொண்டு வாக்குச் சீட்டுக்கட்டுகளுக்கு தொடரிலக்கங்கள் அளிக்கப்படும்.

6) இவ்வாறு வகைப்படுத்தியதன் பின்னர் ஒருவருக்கு மட்டும் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை, இருவருக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை, மூவருக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை, மூவருக்கு கூடுதலாக அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை, விருப்புக்கள் எதுவும் அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை, யாருக்கு அடையாளமிடப்பட்டது என்பதைத் தீர்மானிக்க முடியாத நிச்சயமற்ற வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை ஆகிய எல்லாவற்றையும் கூட்டி அது உரிய கட்சியினால் பெறப்பட்ட மொத்த வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கைக்கு சமமானதாவென ஒப்பிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளப்படும். இத் தகவல் **CE/CO/PR/3** படிவத்தில் அதற்குரிய நிரலில் பதியப்படும்.

7) மூவருக்கு கூடுதலாக அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள், விருப்புக்கள் எதுவும் அடையாளமிடப்பாத வாக்குச்சீட்டுக்கள், யாருக்கு அடையாளமிடப்பட்டது என்பதை தீர்மானிக்க முடியாத நிச்சயமற்ற வாக்குச் சீட்டுக்கள் ஆகிய அனைத்து வாக்குச் சீட்டுகளினதும் பின்புறத்தில் "வாக்கு எண்ணப்பட்டது விருப்பு செல்லுபடியற்றது" என முத்திரை பொறிக்கப்படும்.

விருப்புக்கள் எண்ணப்படுகின்ற போது செல்லுபடியற்ற / கணக்கெடுக்க முடியாத வாக்குச் சீட்டுக்கள் தொடர்பான வெளிப்படுத்துகை படிவம் **PE22** இல் கொடுக்கப்படும்.




**ஒப்புநோக்கல் பத்திரத்தில் (CE/CO/PR/1) பதிதலும் விருப்பு வாக்குகளை எண்ணலும்.**

8) அடுத்ததாக ஒவ்வொரு வாக்குச் சீட்டுக் கட்டுக்கும் வெவ்வேறு ஒப்புநோக்கல் பத்திரமொன்றுடன் **(CE/CO/PR/1)** விருப்புக்களை அடையாளமிடும் அலுவலர்களிடம் கையளிக்கப்படும். அந்த ஒப்புநோக்கல் பத்திரத்திலும் வாக்குச் சீட்டுக் கட்டில் இடப்பட்ட தொடரிலக்கமும் அதிலுள்ள விருப்புக்களின் எண்ணிக்கையும் குறிப்பிடப்படும். விருப்புக்களின் எண்ணிக்கை என்று குறிப்பிடப்படுவது என்னவென்றால் ஒரு விருப்புடன் கூடிய 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டொன்றில் 50 விருப்புக்களும் 2 விருப்புக்களுடன் கூடிய 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டொன்றில் 100 விருப்புக்களும் 3 விருப்புக்களுடன் கூடிய 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டொன்றில் 150 விருப்புக்களும் இருத்தல் வேண்டும். இவ்வாறு பரிசீலிக்கப்படுவதன் மூலம் விருப்புக்கள் அடையாளப்பட்டுள்ளதன் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

9) அதன்பின்னர் ஒப்புநோக்கல் பத்திரங்களை அடையாளமிடும் அலுவலர்கள் ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும் அடையாளமிடப்பட்டிருக்கின்றவிருப்புக்களின்எண்ணிக்கையை உரிய வேட்பாளரின் இலக்கத்தின் கீழ் ஒப்புநோக்கல் பத்திரத்தில் **(CE/CO/PR/1)** குறிப்பிடுவர். (படம் **10a, 10b** மற்றும் **10c** ஐப் பார்க்கவும்)

10) விருப்புக்களை அடையாளமிடுவதற்கான ஒப்புநோக்கல் பத்திரத்தில் **(CE/CO/PR/1)** ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் குறித்தொதுக்கப்பட்ட கூடொன்றினுள் அவருக்காக அளிக்கப்பட்டுள்ள விருப்புக்களின் எண்ணிக்கையைக் குறிப்படுவதற்காக 50 சிறிய கூடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஒப்புநோக்கல் பத்திரத்தின் மாதிரியொன்றின் ஒரு பகுதி படம்-**10a,b,c** இல் காட்டப்பட்டுள்ளது.

11) இதன் மூலம் கட்சியொன்றின் வாக்கெண்ணும் முகவர்கள் எடுத்த எடுப்பிலேயே தனது வேட்பாளருக்கு கிடைக்கும் விருப்புகளின் எண்ணிக்கையை ஊகித்துக் கொள்ள முடியும். (தொடரும்)

# பாராளுமன்றக்கூட்டத்தை கூட்டுவது சட்டத்திற்கு முரணானது - கிரியெல்ல



(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரான லக்ஷ்மன் கிரியெல்ல, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து கோரிக்கை விடுத்துள்ளார். கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்டங்களை நடத்துவதை குறைக்க வேண்டும்.

அப்படி நடத்துவது அந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டத்திட்டங்களை மீறும் நடவடிக்கையாகும்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமரும் ஆசனங்கள் அரசாங்கம் வெளியிட்டுள்ள விதிமுறைகளுக்கு முன்னுக்கு பின் முரணானது. கூட்டங்கள் நடத்த தடைகள் விதிக்கப்பட்டுள்ள நிலைமையில், பாராளுமன்றத்தை கூட்டுவதும் சட்ட விதிகளுக்கு முரணானது.

சட்டத்தை இயற்றும் இடத்தில் அந்தச் சட்டம் மீறப்படுமாயின் நாட்டுக்கு வழங்கும் முன்னுதாரணம் என்ன?.

இதனால், 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் லக்ஸ்மன் கிரியெல்ல தனது கடிதத்தில் கூறியுள்ளார். (நி-7)

# கொழும்பு வர்த்தக நிலையத்தில் நால்வருக்கு தொற்று உறுதி



(கொழும்பு)

கொழும்பு - புறக்கோட்டை 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள மொத்த விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரியும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த விற்பனை நிலையம் நேற்று திங்கட்கிழமை காலை மூடப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

மேலும் அங்கு பணிபுரியும் ஏனைய ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (நி-7)

# தாதியுடன் பழகியவர்களிற்கு தொற்றில்லை

(கஹதுட்டுவ)

கஹதுட்டுவ ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான தாதியுடன் பழகிய 100 பணியாளர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளதாக கஹதுட்டுவ சுகாதார சேவை அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப் பணியாளர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்குரிய எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை என்றும் மருத்துவ அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய தாதியொருவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து தனியார் வைத்தியசாலையொன்றின் நடமாடும் சேவை மூலம் 360 பணியாளர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா இரண்டாவது அலை ஆரம்பமானதையடுத்து குறித்த தொழிற்சாலையின் பணியாளர்கள் அனைவரும் முகக் கவசங்களை அணிந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியுள்ளதால் தாதியிடமிருந்து குறித்த தொற்று ஏனையோருக்குப் பரவியிருக்க வாய்ப்பில்லை என்றும் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (நி-7)

# பிள்ளையானின் வழக்கு ஒத்திவைப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு கொரோனா காரணமாக சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் சமூகம் அளிக்காத காரணத்தால் விசாரணைக்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம், 10 ஆம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்று இடம் பெற்றது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நீதிமன்றத்திற்கு சந்திரகாந்தன் உட்பட ஆறு பேரும் அழைத்து வரப்பட்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் "நவம்பர் 2 ஆம், 10 ஆம், 16 ஆம் திகதிவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஜ-4)

# வணிக நிறுவனங்களினால் கோரப்பட்ட கடன் விண்ணப்பங்களுக்கு மத்திய வங்கி ஒப்புதல்




(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலினால் பாதிக்கப்பட்ட வணிக நிறுவனங்களிலிருந்து கோரப்பட்ட 61,907 கடன் விண்ணப்பங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது.

சௌபாக்யா கொவிட்-19 புனர்வாழ்வு கடன் திட்டத்தின் கீழ் 177.9 பில்லியன் ரூபாய் கடன், மூன்று கட்டங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் ஊடாக நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட 45,582 பயனாளிகளுக்கு வழங்குவதற்காக 133 பில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தற்போது அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலின் 2 ஆம் அலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதில் அதிகளவு வணிக நிறுவனங்களே பாதிக்கப்பட்டுள்ளன.

வணிக நிறுவனங்களின் பாதிப்பு நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடுமென பெரும்பாலான கல்வியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையிலேயே, வணிக நிறுவனங்களிலிருந்து கோரப்பட்ட கடன் விண்ணப்பங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# கொரோனா கொத்தணியின் தோற்றம் கண்டுபிடிப்பதற்கு பதிலாக முன்னெச்சரிக்கையே அவசியம்

(கொழும்பு)

சமூகத்திலிருந்து பரவும் கொரோனா கொத்தணிகளால் சமூகமயமாக்கப்படுவதற்கான அதிக ஆபத்து இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

சமூகத்திலிருந்து பரவும் கொரோனா கொத்தணிகளால் சமூகமயமாக்கப்படுவதற்கான அதிக ஆபத்து உள்ளது என தெரிவித்துள்ளார்.

கொவிட் -19 நோயாளிகளின் மூலம் இதுவரை கண்டறியப்பட்டிருந்தாலும் கண்காணிக்கப்பட்டிருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் அந்த மூலத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

பிராண்டிக்ஸ் கொரோனா கொத்தணியின் தோற்றத்தைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்டிப்பாக பின்பற்றுவதே மிக முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, எதிர்காலத்தில் தனிமைப்படுத்தப்படக்கூடிய பகுதிகளில் நடமாட்டத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ளார். (நி-7)

# பாரதம்

# அமைதிப் பேரணி கலவரமாக மாறியதில் 30 பேர் உயிரிழப்பு; ஆயிரக்கணக்கில் காயம்

## போராட்ட களமாகியது சிலி



(சாண்டியாகோ)

தென் அமெரிக்க நாடான சிலியின் சாண்டியாகோவின் மத்திய சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கானோர் ஒன்றுகூடி முன்னெடுத்த வெகுஜன ஆர்ப்பாட்டங்களில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை அமைதியாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரணியானது இரவு நேரத்தில் கலவரமாக மாற்றமடைந்தது.

பொலிஸார் தலைநகரில் கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர்ப்புகை மற்றும் நீர் பீரங்கியைப் பயன்படுத்தி போராட்டக்காரர்களைத் தாக்கியமையினால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பத்தில் பெரும்பாலும் அமைதியாக முன்னெடுக்கப்பட்ட போதிலும் வன்முறை சம்பவங்கள், சுப்பர் மார்க்கெட்டுகளை சூறையாடுவது மற்றும் பிற்பகுதியில் தலைநகர் முழுவதும் பொலிஸாருடன் மோதல்கள் ஆகியவற்றால் வன்முறைகள் வெடித்தன.

கோபமடைந்த கும்பல் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி மேயரைக் கேலி செய்து அச்சுறுத்தியது. பின்னர், முகமூடி அணிந்த நபர்கள் பொலிஸ் தலைமையகம் மற்றும் தேவாலயத்தை தீ வைத்தனர்.

அதிகாலை வேளையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றொரு சாண்டியாகோ தேவாலயத்தைத் தாக்கியது.

அமைதியின்மைக்கு மத்தியில் 15 இற்கும் மேற்பட்ட மெட்ரோ புகையிரத நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன.

சிலியில் ஓய்வூதியம், சுகாதாரம் கல்வி மற்றும் சர்வாதிகார அரசியலமைப்பு போன்றவற்றின் சீர்திருத்தங்களை முன்வைத்து 2019 ஒக்டோபர் 18 ஆம் திகதி வெகுஜன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு டிசெம்பர் வரை தொடர்ந்தது.

இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டத்தின் ஒரு வருடத்தை நினைவுகூரும் வகையிலேயே தற்போதைய பேரணி முன்னெடுக்கப்பட்டு கலவரமாக மாறியமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# பதப்படுத்தப்ப...
# சீனாவில் கண்...

(பீஜிங்) -
சீனாவின் வு...
பர் மாதம் தோ...
கொரோனா, தற்...
உலகத்துக்கு செ...
அறிமுகம் செய்...
கடல்வாழ் உயிரி...

அதன்பின்னர் அங்கு கொரோனாக் கட்டுப்படுத்தப்பட்ட பின்னர், பீஜிங் நகரில் உள்ள ஜின்பாடி மொத்த விற்பனை சந்தை மூலம் பெருமளவில் பரவியது... இந்த நிலையில், அங்குள்ள கிங்டாவோ என்ற துறைமுக நகரத்தில் கொரோனா வைரஸ் தொற்று, கொத்துக் கொத்தாகப் பரவத் தொடங்கியது.

இதனால் கவலை அடைந்த அந்த நகர...

# 13 ஆண்டுகால ஈரான் மீதான ஆயுதத்தடைக்கு முற்றுப்புள்ளி



(டெஹ்ரான்)

வலுவான அமெரிக்க எதிர்ப்பையும் மீறி ஐக்கிய நாடுகள் சபையின் ஈரான் மீதான ஆயுதத் தடை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலாவதியாகியுள்ளது என ஈரானிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஈரானின் பாதுகாப்புக் கோட்பாடு அதன் மக்கள் மற்றும் பூர்வீக திறன்களை வலுவாக நம்பியிருப்பதை அடிப்படையாகக் கொண்டது.

வழக்கத்திற்கு மாறான ஆயுதங்கள், பேரழிவு ஆயுதங்கள் மற்றும் வழக்கமான ஆயுதங்களை வாங்குதல் ஆகியவை ஈரானின் பாதுகாப்புக் கோட்பாட்டில் இல்லை என்றும் ஈரானிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஈரான், ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையில் 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ் ஈரான் மீது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை 2007 ஆம் ஆண்டு ஆயுதத் தடையை விதித்தது.

எவ்வாறாயினும் 2018 இல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தத்திலிருந்து விலகியதிலிருந்து வோஷிங்டனுக்கும் டெஹ்ரானுக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்தன.

ஈரான் மீது கடுமையான பொருளாதாரத்தடைகளின் அலைகளை விதித்து அமெரிக்கா மே 2018 இல் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தத்திலிருந்து விலகியது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் அணுசக்தி ஒப்பந்தத்தை அவிழ்க்கவும் ஈரான் மீதான ஆயுதத் தடையை நீக்குவதைத் தடுக்கவும் தனது அதிகாரத்தை அனைத்து வழிகளிலும் பயன்படுத்தியுள்ளது.

அதன் ஒரு கட்டமாக ஒக்டோபர் மாத தொடக்கத்தில் 18 ஈரானிய வங்கிகள் தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. அவற்றில் மனிதாபிமான வர்த்தக பரிவர்த்தனைகளை செயலாக்குவது உட்பட ஈரானின் நிதித் துறையை உலகப் பொருளாதாரத்திலிருந்து திறம்படப் பிரிக்கிறது.

ஈரானின் பிராந்திய செல்வாக்கை விரிவாக்குவதை எதிர்க்கும் இஸ்ரேல் மற்றும் பல அரபு நாடுகளின் முயற்சிகளுக்கு அமெரிக்க நிர்வாகம் தீவிரமாக ஆதரவு காட்டி வருகிறது.

14 யு.என்.எஸ்.சி உறுப்பு நாடுகளில் இருந்து, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் பிரித்தானியா E3 என அழைக்கப்படும் நாடுகள் மற்றும் 8 பேர் வாக்களித்தனர், ரஷ்யாவும் சீனாவும் இந்த நீட்டிப்பை எதிர்த்த அதேவேளை டொமினிகன் குடியரசு மட்டுமே தீர்மானத்தை ஆதரித்தது.

ஈரானின் ஆயுதத் தடையை காலவரையறையின்றி நீட்டிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அமெரிக்கா ஒகஸ்ட் மாதம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தாக்கல் செய்தது. எனினும் அது நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் வழக்கமான ஆயுத ஏற்றுமதி மற்றும் ஏவுகணை தொழில்நுட்பத்தின் மீதான ஐரோப்பிய ஒன்றிய தடைகள் இன்னும் நடைமுறையில் உள்ளது, அவை 2023 வரை நடைமுறையில் இருக்கும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# வேலை கிடைத்ததும் சிரிப்பை மறந்து விடும் மனிதன்

## ஆய்வில் தகவல்

(கலிபோர்னியா)

வேலையில் கவனம் செலுத்துவதால் 23 வயதில் இருந்து நகைச்சுவை உணர்வு, சிரிப்பை இழக்கிறோம் என்று ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது. மனித வாழ்க்கையில் நகைச்சுவை உணர்வு, சிரிப்பு ஆகியவை முக்கிய பங்கு வகிக்கிறது. இதன்மூலம் மன இறுக்கத்தில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் அதுபோன்ற மனநிலை எப்போதும் இருப்பதில்லை. ஒருவித பதற்றத்துடனேயே வாழ்க்கை செல்வதாக பலர் கருத்து தெரிவித்துள்ளனர். இதற்கு நகைச்சுவை உணர்வு, சிரிப்பு ஆகியவற்றை நாம் இழப்பது தான் காரணம்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில் 23 வயதில் இருந்து நகைச்சுவை உணர்வு- சிரிப்பை இழக்கிறோம் என்று தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தை சேர்ந்த வணிக பள்ளி கல்வியாளர்கள் ஜெனிபர் ஆகர், நவோமி பாக் டோனஸ் ஆய்வை நடத்தினர். அதில் தெரிவித்துள்ளதாவது, மக்கள் 23 வயதை எட்டும் போது ஒவ்வொரு நாளும் சிரிக்கும் நேரம் வீழ்ச்சி அடைய தொடங்குகிறது. 166 நாடுகளில் 1.4 மில்லியன் மக்களிடம் ஆய்வுகள் நடத்தப்பட்டது. இதில் அவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை முறை சிரித்தார்கள் என்பதை அளவிட்டனர்.

இதில் 23 வயதில் இருந்து சிரிப்பது குறையத் தொடங்கி உள்ளது. இதற்கு அப்போதில் இருந்து வேலை உலகில் நுழைவது தான் காரணம். நாம் வளர்ந்து பணியாளர்களாக வேலை உலகில் நுழையும்போது தீவிரமான மற்றும் முக்கியமான நபர்களாக மாறி விடுகிறோம்.

அங்கு சிரிப்பை வர்த்தகத்துக்காகவும், வேலைக்காகவும் பயன்படுத்துகிறோம். உழைக்கும் உலகில் நகைச்சுவை உணர்வு குறைவான திறன்கொண்டதாக இருக்கும். ஆனால் அதை சரியாக பயன்படுத்தும்போது ஒரு நிறுவனம் வல்லரசாக மாறக்கூடும்.

சராசரியாக 4 வயது குழந்தை ஒரு நாளுக்கு 300 முறை சிரிக்கிறது. அதேநேரத்தில் சராசரியாக 40 வயது உடையவர் 10 வாரங்களில் 300 முறை சிரிக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வெளிநாடு

# ...தப்பட்ட உணவில் வாழும் நிலையில் கொரோனா வைரஸ் கண்டுபிடிப்பு-பதற்றத்தில் மக்கள்



ங்)

ன் வுஹான் நகரத்தில் கடந்த ஆண்டு டிசெம் தோன்றி, தலைநகர் பீஜிங் வரை உலுக்கிய , தற்போது உலகமெங்கும் பரவிவிட்டது. கு கொரோனா வைரஸை முதன்முதலில் செய்து வெளிப்படுத்தியது வுஹான் நகர உயிரின மாமிச சந்தை ஆகும்.

னாக் நகரில் பனை வியது ாவோ ரானா தாகப் த நகர

நிர்வாகம், அங்கு வாழும் ஒரு கோடியே 10 இலட்சம் மக்களுக்கும் வைரஸ் தொற்று பரிசோதனை நடத்தியது. பதப்படுத்தப்பட்ட உணவில் வாழும் கொரோனா வைரஸ் சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது, பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்தப் பரிசோதனைக்குப் பின்னர் கொத்துக் கொத்தாகப் பரவல் இல்லை.

ஆனால் தற்போது அங்கு பதப்படுத்தி, உறைய வைக்கப்பட்ட உணவு பொட்டலத்தின் மேற்பரப்பில் கொரோனா வைரஸ் வாழும் நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எல்லோரையும் அதிர்ச்சிக்கும் பதற்றத்துக்கும் ஆளாக்கி உள்ளது. இப்படி உணவுப்பொருள் பக்கற்றின் மேற்பரப்பில் வாழும் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது உலகிலேயே இது முதல் முறை ஆகும்.

சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் உறுதி செய்துள்ளது.

சீனாவில் கடந்த ஜுலை மாதம், ஒரு கண்டெய்னரின் உள் சுவரிலும், பக்கற்றிலும் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உறைந்த இறால் இறக்குமதி நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் தற்போது கிங்டாவோ நகரில் பதப்படுத்தி உறைய வைக்கப்பட்டிருந்த உணவு பொட்டலத்தின் மேற்பரப்பில் கொரோனா வைரஸ் வாழும் நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டு இருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த உணவுப்பொருள் எந்த நாட்டில் இருந்து அங்கு இறக்குமதி செய்யப்பட்டது என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

இந்தப் பக்கற்றைத் தொடுகிறவர்களைக் கொரோனா வைரஸ் தொற்றிக் கொள்ளும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதையும் சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் உறுதிப்படுத்தி உள்ளது.

இதற்கிடையே சீனாவின் பிரதான பகுதிக்கு வெளியே 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய சுகாதாரத் துறை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பிரான்ஸில் மீண்டும் உச்சம்



# 9 இலட்சத்தை நெருங்கும் தொற்றாளர்களின் எண்ணிக்கை

(பாரீஸ்)

பிரான்ஸில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒன்பது இலட்சத்தை நெருங்குகிறது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, பிரான்ஸில் கொரோனா வைரஸ் தொற்றினால், எட்டு இலட்சத்து 97 ஆயிரத்து 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால், அதிக பாதிப்பை எதிர்கொண்ட எட்டாவது நாடாக விளங்கும் பிரான்ஸில், மொத்தமாக 33 ஆயிரத்து 477 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மட்டும் வைரஸ் தொற்றினால், 29 ஆயிரத்து 837 பேர் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிகரித்தது கொரோனாத் தொற்று கட்டுப்பாடுகளை இறுக்கும் இத்தாலி

(ரோம்)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் கட்டுப்பாடுகளை கடுமையாக்குவதற்கான புதிய நடவடிக்கைகளை இத்தாலி அறிவித்துள்ளது.

இத்தாலியில் 9 மணிக்குப் பிறகு பொது இடங்களை மூடுவதற்கும், உணவகங்களை திறக்கும் நேரம் மற்றும் வாடிக்கையாளர்களின் அனுமதிக்கும் அளவும் குறைக்கப்படவுள்ளது.

இத்தாலியில் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக நாளாந்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் குறித்த கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ளன.



ஐரோப்பாவில் கொரோனா வைரஸ் உயிரிழப்பில் இத்தாலி முதலிடத்திலும் பிரித்தானியா இரண்டாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நிலச்சரிவில் சிக்கிய பேருந்து 16 பேர் உயிரிழப்பு

## பாகிஸ்தானில் சோகம்




(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் நிலச்சரிவில் சிக்கிய பேருந்தொன்று பள்ளத்தில் வீழ்ந்து குடைசாய்ந்ததில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ரவுண்டோ நகரில் மலைப்பாங்கான வீதியில் பேருந்து சென்றபோது சற்றும் எதிர்பாராத வகையில் அங்கு பாறைகள் உருண்டு நிலச்சரிவு ஏற்பட்டது.**

**இதன்போது பாறை ஒன்றின் மீது மோதிய பேருந்து வீதியோரம் உள்ள பள்ளத்தில் வீழ்ந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் பேருந்தில் பயணம் செய்த சாரதி, 4 இராணுவ வீரர்கள் உட்பட 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.** (நி)

# அயோத்தி ஸ்ரீ இராமர் கோயிலுக்கான அடிக்கல் இலங்கையில் இருந்து



(கொழும்பு)

அயோத்தியில் நிர்மாணிக்கப்படும் ஸ்ரீராமர் கோயிலுக்கான அடிக்கல் ஒன்றினை இலங்கையிலிருந்து பூஜிக்கப்பட்டு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராமாயணத்தில் போற்றப்படும் இலங்கையின் கோயிலாகவே நுவரெலியா சீத்தா எலிய சீதையம்மன் ஆலயம் காணப்படுகிறது.

அந்த ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்படும்போது குறித்த கல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் பின்பு இதுவரை பூஜிக்கப்பட்ட ஒன்றெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் அயோத்தியில் கட்டப்படும் ஸ்ரீஇராமனின் கோயிலுக்கான அடிக்கற்களில் ஒன்றாக இதனைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் மற்றும் ஹாவாஹெலிய ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் குறித்த கல்லை வைத்து விசேட பூஜைகள் செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து, குறித்த அடிக்கல்லை இந்தியாவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஙி)

# தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 302 பேர் கைது

## 53 வாகனங்கள் பறிமுதல்

(கம்பஹா)

கம்பஹா மாவட்டத்தில் 19 பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு மீள் அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மீண்டும் வர்த்தக நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்படாது என்று தெரிவித்துள்ள பொலிஸார், கொரோனா வைரஸ் மேலும் பரவாது தடுக்க பொதுமக்கள் வீட்டிலேயே இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை ஊரடங்கு உத்தரவு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 37 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஐந்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து, ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் ,302 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 53 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஙி)

# மீண்டவர்கள் வீடுகளுக்கு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 37 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து இதுவரை 3 ஆயிரத்து 440 பேர் பூரணமாக குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மினுவாங்கொட கொரோனா கொத்தணியில் மேலும் 47 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 43 பேர் கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என்றும் 4 பேர் தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மினுவாங் கொட கொரோனா கொத்தணியில் அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 122ஆக அதிகரித்துள்ளது. (ஙி)

# ஜப்பான் பிரதமருக்கு சம்பிக்க கடிதம்

(கொழும்பு)

ஜப்பானின் நிதியளிக்கப்பட்ட இலகு ரயில் திட்டம் நடப்பு அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டமை காரணமாக ஜப்பானுக்கு ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்பட்டால் அதற்காக மன்னிப்புக் கோருவதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரணவக்க ஜப்பான் பிரதமர் யோஷி ஹைட் சுகாவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் ஜப்பானிய ஒத்துழைப்புடன் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு முன்னெடுக்கப்படவிருந்த இலகு ரயில் திட்டம் நடப்பு அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஜப்பானுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்காக இலங்கை மக்கள் சார்பாக அந்த நாட்டின் அரசாங்கத்திடமும், ஜப்பான் மக்களிடமும் மன்னிப்பு கோருவதாக சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

2008 - 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஜெய்காவின் நிதியுதவியில் பேருந்து நவீனமயமாக்கல், தொடரூந்து மின்மயமாக்கல், இரட்டை வரி தொடரூந்துசேவைஎன்பன அடையாளம் காணப்பட்டன.



அதைத் தொடர்ந்து, 2015-16 ஜப்பானிய மற்றும் இலங்கை வல்லுநர்கள் கூட்டாக மேற்கொண்ட இரண்டாவது விரிவான ஆய்வில் உயர்ந்த தாக்க மூலோபாய திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன.

எனினும் ஜப்பானிய அரசாங்கத்துக்கு நன்கு தெரிந்த காரணங்களால் இந்த திட்டம் இலங்கையின் நடப்பு அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதாக பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். இதே வேளை இலங்கை க்கு ஜப்பான் வழங்கிய உதவிகளையும் அவர் நினைவு கூர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4).

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தவளையால் முடியும்!

அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் சிலபேர் கனடா நாட்டிலே உள்ள ஒரு காட்டு வழியாக போய்க் கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு காட்சியைப் பார்த்தார்கள். அதாவது பனிக்கட்டிகளிலே தவளைகள் உறைந்து போன நிலையில் இருந்ததைப் பார்த்தார்கள். தவளையின் உடல் கெடாமல் அப்படியே இருக்கின்றது. காலைப்பிடித்து அலட்சியமாக தூக்கினால் அது கண்ணாடி மாதிரி உடைந்துவிடுகின்றது. அவ்வளவு தூரம் பனிக்கட்டியோடு கட்டியாக உறைந்து போய் கிடக்கின்றது.

அது மாதிரி உறைந்து கிடக்கின்ற ஒரு தவளையை எடுத்து கொஞ்சம் சூடு படுத்தினால் அது துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விடுகின்றது. அப்பொழுது தான் அதெல்லாம் உயிரோடு இருக்கின்ற விவரம் அவர்களுக்குப் புரிந்தது. அதன் பின்பு அதைப் பற்றி தீவிரமாக ஆராய ஆரம்பித்துவிட்டார்கள். கனடா நாட்டுக் காடுகளிலே உள்ள ஒரு நாலுவிதமான தவளைகள்...இது மாதிரி குளிர் காலத்திலே உறைந்து விடு கின்றது. மறுபடியும் பனி உருகுகின்ற பொழுது உயிர்த்தெழு ந்து தாவிக் குதித்து ஓட ஆரம்பித்துவிடுகின்றது.

பனிக்கட்டி அளவுக்குக் கட்டியாக உறைந்து போகின்ற தவளைகள் மறுபடியும் உயிர்வந்து ஓடுகின்றது எப்படி? உறையும் போது தவளைகள் சாகாமல் இருக்கின்றது எப்படி? இந்தத் தவளைகள் எல்லாம் அதற்கு இரண்டு வகையான உத்திகளைக் கடைப்பிடிக்குதாம். தவளை உடம்பிலே செல்கள் இருக்கின்றதல்லவா...அந்த செல்களுக்கு உள்ளேயும் வெளி யேயும் தண்ணீர் உண்டு. உள்ளே இருக்கின்ற தண்ணீர் உறைவதில்லை. அதற்குக் காரணம் எத்திலீன் கிளைகால் என்னும் சர்க்கரைப் பொருள். இதை தவளையின் உடம்பிலே உள்ள செல்கள் உற்பத்தி செய்துவிடுகின்றது. இது செல் வரிசைக்கு வெளியே திரைமாதிரி படர்ந்துவிடுகின்றது. அது குளிர் உள்ளே போவதை தடுத்துவிடுகின்றது.

ஒரு தவளை உறைந்த நிலையை அடைகின்ற பொழுது அது உம்பிலே ஏராளமான அளவு எத்திலீன் கிளைகால் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதனால் தவளையில் எடையே 5ல் 1 பங்கு அதிகமாகிவிடுகின்றது. சாதாரணமாக 125 கழுராம் எடையுள்ள தவளை அந்த சமயத்திலே 150 கிராம் எடை இருக்குமாம். உறைந்து போன தவளையின் இதயம் சுருங்கி விரிவதி ல்லை. அப்படியே நின்றுவிடுகின்றது. இரத்த ஓட்டமும் நின்று விடுகின்றது. நுரையீரல் சுருங்கி விரிவதில்லை. அதனால் தவளையின் சுவாசமும் நின்றுவிடுகின்றது. நுரையீரல் சுரு ங்கி விரிவதில்லை. அதனால் தவளையின் சுவாசமும் நின்று விடுகின்றது. கிட்டத்தட்ட செத்துப் போனது மாதிரிதான். அந்த நிலையில் தவளை பனிக்கட்டித் துண்டு மாதிரி ஆகிவிடும்.

சரி, மனிதனை இது மாதிரி உறைய வைத்து மறுபடியும் உயிர் கொடுக்க முடியுமா? தவளை உடலிலே உற்பத்தியாகின்ற அந்த எத்திலீன் கிளைகால் என்கின்ற சர்க்கரைப் பொருள் மனித உடம்பிலேயும் உற்பத்தி ஆகின்றது. ஆனால் போதுமான அளவுக்கு உற்பத்தியாவது இல்லை. ஒரு லீற்றர் தவளையின் இரத்தத்தில் 80 கிராம் எத்திலீன் கிளைகால் இருந்தாலும் அதனால் தீய விளைவு எதுவும் ஏற்படுவதில்லை.

நெப்போலியன் படை ரஷ்யா மீது படையெடுத்துப் போகும். கடுமையான குளிர். பிரான்ஸ் படை அங்குலம் அங்குலமாக முன்னேறும். ஒரு படைப்பிரிவின் கேணல் ஒருத்தர் திடீர் என்று கீழே விழுவார். உடல் விறைத்துவிடும். மூச்சு நின்றுவிடும். அவர் இறந்துவிட்டதாக நினைத்து அப்படியே போட்டுட்டுப் போய்விடுவார்கள்.

இருபது வருடம் கழித்து பூமியைத் தோண்டுகின்றவர்கள் பார்வையிலே பனிக்கட்டியாலே மூடியிருக்கின்ற அந்த கேணல் உடம்பு கிடைக்கும். சுற்றுப்புற வெப்பம் காரணமாக பனிக்கட்டி உருகும். கேணலுக்கு உயிர் வந்துவிடும். எட்மண்ட் என்கின்ற எழுத்தாளரின் கற்பனையிலே உருவான இந்த கதை... உண்மையிலேயே சாத்தியமானாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

எங்கள் ஆசாமி ஒருத்தன் திடீர் என்று ...குளிர் தாங்காமல் சுருண்டு விழுந்துவிட்டான்.. டாக்டர் வந்து பார்த்தார். நாடித் துடிப்பு இல்லை. ஆள் செத்துவிட்டான் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். இவனைத் தூக்கிக் கொண்டு சுடுகாட்டுக்குப் போகின் றார்கள். பாதிவழியிலேயே இவன் பாடையில் முழித்துக் கொண்டு எழுந்து கொண்டு உட்கார்ந்துவிட்டு.. டேய். நான் இன்னும் சாகலே...உயிரோட தான் இருக்கின் றேன். என்கின்றான். அவனை தூக்கிக்கொண்டு வந்த நான்கு பேரிலே ஒருத்தன் அவன் தலையில் தட்டி.... டேய்.. டாக்டரே சொல்லிட்டாரு நீ செத்துவிட்டதாக அவரை விட நீ விடயம் தெரிந்தவனா? பேசாமல் படுடா..அப்படி என்று சொல்லிவிட்டு-வேகமாக நடக்க ஆரம்பித்தானாம்.

# அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை தீர்ப்பதில் அரசு துரிதம்

**(கொழும்பு)**

**அதிபர், ஆசிரியர்களின் சம்பள பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை கல்வியமைச்சால் எடுக்கப் பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் எஸ்.பிரதீப் தெரிவித்தார்.**



அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் முகமாக நீண்ட காலமாக விடுத்த கோரிக்கைக்கமைய, கல்விச் சீர்திருத்தங்கள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்துடன் கல்வியமைச்சில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை மிக விரைவில் தீர்த்து வைக்கப்படுமென, இராஜாங்க அமைச்சர் வாக்குறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான யோசனை முன்மொழியப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நீண்டகாலமாகத் தொடரும் சம்பள ஒழுங்கீனம் தொடர்பாக அவ்வப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் 2019 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பாகவும் அது அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டினார். இதேவேளை, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான நிரந்தரத் தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# '20' ஐ தோற்கடிப்பதில் உறுதியாக இருக்கின்றோம்

## சஜித் திட்டவட்டம்

(கொழும்பு)

20ஐ தோற்கடிக்க வேண்டும் என்பதில் தாங்கள் உறுதியாக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கத்திலுள்ள குறைகளை நாம் அரசாங்கத்திடம் சுட்டிக் காட்டுவோம்.

இது எதிர்க்கட்சியொன்றின் வகிபாகமாகவே நாம் கருதுகிறோம். இன்று 20ஐ நிறைவேற்றிக் கொள்ளவே அரசாங்கம் தீவிரம் காட்டுகிறது.

இதனால்தான் கொரோனாவைக்கூட பெரிதாக கவனத்தில் எடுக்காமல் இருக்கிறது. எவ்வாறாயினும், 20ஐ தோற்கடிக்க நாம் அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்வோம்.

இது சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் என்று ஏற்கனவே நாம் அறிந்துள்ளோம். இப்படியான இந்தச் சட்டமூலத்தை நாம் நிச்சயமாக தோற்கடித்தே ஆக வேண்டும்.

19ஆவது திருத்தச்சட்டத்தை தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பு படுத்துகிறார்கள். இது முற்றிலும் பிழையான, ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தாகும்.

உண்மையில் 19ஆல், நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. இதனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றுதான் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

19 பிளஸின் ஊடாக, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவருக்கும் சம அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இதனைவிடுத்து, யாருடைய அதிகாரத்தையும் குறைத்து இன்னொருவருக்கு அதிகாரத்தை பலப்படுத்த வேண்டும் என நாம் விரும்பவில்லை. 19 தொடர்பாக அரசாங்கம் தொடர்ச்சியாக பொய்களை மட்டும்தான் கூறிக்கொண்டிருக்கிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பாடசாலைகளில் சுகாதார தேவைகளுக்கு '1988' ஐ அழைக்கவும்

(கொழும்பு)

எந்தக் காரணத்துக்காகவும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சுகாதார நலனை உறுதிப்படுத்தாத வகையில் செயற்படுதல் அல்லது தேவையான சுகாதார வசதிகள் கிடைக்காவிடின் உடனடியாகக் கல்வி அமைச்சின் துரித தொலைபேசி இலக்கமான 1988 என்ற இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாப் பரவலால் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்து நிலைமையைக் கவனத்தில் கொண்டு சுகாதாரம் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து பிரிவுகளிடமிருந்து பூரண ஒத்துழைப்பைப் பெற்று பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களைப் பாதுகாப்புடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஜ-4)

# பரீட்சைகள் ஒன்லைனில்

(கொழும்பு)

பல்கலைக்கழகப் பரீட்சைகளை ஒன்லைன் மூலம் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றால் பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகளைப் பாதிப்பின்றி முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக் கழகங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

(கொழும்பு)

காலி எல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை தொடர்ந்து இருவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

ஒரு தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம் பெற்றதாகவும் தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில்,

மது அருந்திக்கொண்டிருந்த நான்கு நபர்களிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் சுடப்பட்டுள்ள அதேவேளை காயமடைந்த நபர் கூர்மையான ஆயுதத்தால் துப்பாக்கிதாரியை தாக்கிக் காயப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# தேரர்கள் ஐவருக்கு கொரோனா

(கொழும்பு)

விகாராதிபதி உட்பட தேரர்கள்ஐவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்திற்குட்பட்ட மதுகம ஓவிடிகம மற்றும் பதுகம புதிய காலனி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 17 பேருக்கு கடந்த தினத்தில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

மத்துகம - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த பேருந்து ஒன்றின் சாரதி கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுக்கு உள்ளாகியமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து கடந்த 7 ஆம் திகதி அநுராதபுரத்திற்கு சுற்றுலாப் பயணமொன்றை மேற் கொண்டிருந்த 17 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் விகாராதிபதி ஒருவரும் மற்றும் நான்கு தேரர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போல் 11 பெண்களும் அடங்குவதாகசுகாதார பிரிவினர் தெரிவித்தனர். (ஜ-4)

# பால் சேகரிக்கும் வாகனம் குடைசாய்ந்து விபத்து

(கண்டி)



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஸ்கெலியா சாமிமலை பிரதான வீதியில் பிரவுன்ஸ்விக் தோட்டப் பகுதியில் நேற்றுக்காலை பால் சேகரிக்கும் வாகனம் விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் எவரும் பாதிக்கப்பட்டவில்லை என்றபோதிலும் காட்மோர் பகுதியில் இருந்து வந்த அரச பேருந்துக்கு வளைவில் பேருந்து செல்ல வழி கொடுக்க முயன்ற போது குறித்த பால் சேகரிக்கும் வாகனம் விபத்துக்குள்ளானதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கடல் புறா

## விமோசனச் சீலை




"இங்கு வரப்போவதாக நீங்கள் எனக்கு ஓலையனுப்பியது எப்பொழுது?"

"பத்து நாட்களுக்கு மேலாகிறது."

"அந்தப் பத்து நாட்களாக என் மாளிகை மீது கலிங்கத்தின் ஒற்றர்கள் கண் வைத்திருக்கிறார்கள்."

"தமிழ் வணிகர்களையும் பிரமுகர்களையும் சிறையில் பிடித்து அடைந்து வைக்கும் வேலை எத்தனை நாட்களாக நடக்கிறது."

"மூன்று நாட்களாக"

"அதாவது?"

மன்னன் பீமன் பாலூர் வந்த நாளாக."

பீமன் வந்து மூன்று நாட்களாகின்றனவா?

"ஆம் மிக இரகசியமாக வந்தான். இல்லாவிடில் நான் எச்சரிக்கையடைந்திருப்பேன். மன்னன் வருவதற்கு அறிகுறியாகத் தாரைகள் ஊதப்படவில்லை. சங்கங்கள் சப்திக்கவில்லை. முதலில் ஊருக்குள் வரவேண்டிய குதிரைப் படைகளும் வரவில்லை. பீமன் வந்தது நேற்று வரை யாருக்குமே தெரியாது. திடீரென நேற்று மாளிகையில் என்னை வீரர்களுடன் வந்து பீமனே சிறைப்படுத்தித் துன்புறுத்திய பின்புதான் எனக்கே தெரியும்."

"பீமன் வந்து மூன்று நாட்களாயின என்று சொன்னாயே சேந்தா, அதெப்படித் தெரியும் உனக்கு?"

"பீமனே சொன்னான், 'நான் வந்து மூன்று நாட்களாக உன்னைக் கவனித்து வருகிறேன்' என்று."

இளையபல்லவன் சிறிது நேரம் சிறையில் அப்படியும் இப்படியும் உலாவியபடி சிந்தனையில் ஆழ்ந்தான். திடீரென்று மௌனத்தைக் கலைத்துக் கொண்டு "நான் வந்திருப்பதை எப்படியறிந்தான் பீமன்?" என்று வினவினான் சேந்தனை நோக்கி.

"அது என் குற்றம் இளைய பல்லவரே! தாங்கள் அனுப்பிய ஓலையை என் பணப்பெட்டியில் இரகசிய அறையில் வைத்திருந்தேன். அந்த அறையைத் திறக்கும் முறை எனக்குத்தான் தெரியும் என்று மனப்பால் குடித்திருந்தேன். ஆனால் சோதனையின்போது நிமிட நேரத்தில் பீமன் அந்தக் கள்ள அறையைத் திறந்தான். பீமன் இந்தப் பிறவியில்தான் மன்னன். சென்ற பிறவியில் பெட்டி திறக்கும் திருடனாயிருந்திருக்க வேண்டும்" என்று அலுத்துக் கொண்டு கூறினான் சேந்தன்.

இளையபல்லவன் முகத்தில் கவலைக்குறி படர்ந்தது. "அந்த ஓலையில் கடாரத்தின் மன்னன் குணவர்மனைப் பற்றிக் குறிப்பிட்டருந்தேனே?" என்றான் குரலிலும் கவலை பாய.

"ஆம், குறிப்பிட்டிருந்தீர்கள்" என்றான் சேந்தன்.

"அப்படியானால் குணவர்மன் பாலூரில் இருப்பது பீமனுக்குத் தெரியும்!"

"தெரிந்திருக்க வேண்டும்"

"அவனிருக்குமிடம்?"

அதுவும் தெரிந்திருக்க வேண்டும்"

"அப்படியானால், சோழநாட்டின் உதவியை நாடி வந்திருக்கும் குணவர்மனை ஏன் பீமன் சிறைப்படுத்தவில்லை?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை"

குணவர்மனையும் காஞ்சனா தேவியையும் சிறைப்படுத்தாமல் விட்டு வைப்பதற்கு ஆழ்ந்த அரசியல் காரணங்கள் இருக்க வேண்டும் என்று இளையபல்லவன் முடிவுக்கு வந்திருந்தானானாலும், அந்தக் காரணங்கள் என்னவாயிருக்கக் கூடும் என்பது புரியவில்லை அவனுக்கு. அவர்களுக்கும் தன்னைப் போல் பேராபத்துக் காத்திருக்கிறது என்பதை மட்டுமே புரிந்து கொண்ட இளையபல்லவன், பீமனிடம் அகப்பட்டால் காஞ்சனாதேவியின் கதி என்னவாகுமோ என்பதை நினைத்துத் திகில் கொண்டான்.

அந்தத் திகிலுடன் அநபாயனைப் பற்றிய எண்ணமும் கலந்து கொள்ளவே பல விபரங்கள் விளங்காமல் குழம்பிய இளையபல்லவன் அவற்றைப் பற்றிச் சேந்தனிடமே விளக்கம் கேட்க முற்பட்டு, "சேந்தா!" என்று அவனை விளித்தான்.

அப்பொழுதும் மனவேதனைப் பட்டுக் கொண்டிருந்த சேந்தன் பதிலுக்கு, "ஹூம்" கொட்டினான்.

"அநபாயச் சோழரையும் பீமன் சிறைப்படுத்தினானாமே. தெரியுமா உனக்கு?" என்று வினவினான் கருணாகர பல்லவன்.

"தெரியும்" என்றான் கூல வாணிகன் பெருமூச்சு விட்டு.

"அவரையும் இந்தச் சிறையில் தானே அடைத்திருப்பார்கள்?"

"இதில்தான் அடைத்திருக்க வேண்டும். இந்த ஊரில் வேறு சிறை கிடையாது."

"இந்தச் சிறையைப் பார்த்தாயா சேந்தா!" என்று ஆச்சரியத்துடன் கேட்ட இளையபல்லவன், சிறையையும் சாளரத்தின் மூலம் தெரிந்த சாளரத்தின் வெளிப்புறத்தையும் சுட்டிக் காட்டினான்.

அவன் சிறையை ஆராய்ந்ததால் வெறுப்புக் கொண்ட கூலவாணிகன், "இப்பொழுதே ஆராய்ந்து விடுங்கள் சிறையின் அமைப்பை.

நாளை நடுப்பகலுக்குப் பின்பு நமது கண்கள் எதையும் ஆராய முடியாது" என்றான்.

அவன் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே பேசிக் கொண்டு போனான் கருணாகர பல்லவன். "இந்தச் சிறையின் அமைப்பை நன்றாகப் பார் சேந்தா! சுற்றிலும் பெரிய இருப்புச் சட்டங்கள், சிறையின் ஒவ்வொரு கூடத்திலும் ஏராளமான வீரர்கள். சாளரத்துக்கு வெளியேயும் பார். அதோ தெரியும் உயர்ந்த மதில் பெரும் கோட்டையின் மதில்களைப் போலிருக்கிறது.

அவற்றை எவனும் தாண்டிக் கடக்க முடியாது. தவிர, சிறையின் அறைகளுக்கும் அந்த மதில்களுக்கும் இடையேயுள்ள வெளிப் பகுதி குதிரை வீரர்களால் காக்கப்பட்டிருக்கிறது..."

இப்படிப் பேசிக்கொண்டு போன இளையபல்லவனை இடைமறித்த கூலவாணிகன், "இந்தச் சிறையிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதற்குக் காரணம் கூறுகிறீர்களா?" என்று இகழ்ச்சியுடன் கேட்டான்.

இளையபல்லவனின் கண்கள் கூலவாணிகன் முகத்தில் நன்றாகப் பதிந்தன. குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு சொன்னான் இளைய பல்லவன், "சேந்தா, இந்தச் சிறையிலிருந்து போரிட்டு யாரும் தப்ப முடியாது."

வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த அந்த உண்மையைத் தெரிவிக்க அத்தனை இரகசியமென்னவென்பதை அறியாத கூலவாணிகன், "அது தெரிந்த விடயம்தானே?" என்றான்.

"ஆனால்..." என்று கூறி அப்புறமும் இப்புறமும் கவனித்தான் இளையபல்லவன்.

"ஆனால்?"

"இதிலிருந்து அநபாயர் தப்பியிருக்கிறார்."

கூலவாணிகன் முகத்தில் வியப்புக்குறி படர்ந்தது. "ஆமாம் மறந்துவிட்டேன். எப்படித் தப்பினார்?" என்று கேட்டான், வியப்புக் குரலிலும் ஒலிக்க.

"அதுதான் எனக்குப் புரியவில்லை. இதிலிருந்து அவர் போரிட்டுத் தப்பியிருக்க முடியாது.

வேறெப்படித் தப்பியிருக்க முடியும்!"

"தந்திரத்தால் தப்பியிருக்க வேண்டும்."

(தொடரும்...)

# அரசாங்கத்தின் கவனயீனமே 2 ஆம் அலைக்கான காரணம்

## ருவான் விஜேவர்த்தன சாடல்



(கொழும்பு)

அரசாங்கத்தின் கவனயீனமான செயற்பாடுகளே கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்த்தன, வைரஸ் பரவலின் இரண்டாம் அலை எவ்வாறு ஆரம்பமானது என்பது பற்றிய உண்மையான தகவல்களை வழங்கமுடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் விரைவில் குணமடைவதற்குப் பிரார்த்திக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பௌத்த வழிபாட்டு நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, அரசாங்கத்தின் கவனயீனமே கொவிட் - 19 வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படுவதற்கான பிரதான காரணமாகும்.

வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஆரம்பமான விதம் மற்றும் அது மிகவும் பாரதூரமான வகையில் பரவலடைந்த முறை என்பன தொடர்பான உண்மையான தகவல்கள் இதுவரையில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படவில்லை.

அதுமாத்திரமன்றி கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டின் சில பகுதிகள் முடக்கப்பட்டிருக்கின்றன. அப்பகுதிகளில் இதுவரை காலமும் நாளாந்தம் தொழில்செய்து வருமானம் உழைத்து வந்தவர்கள் தற்போது தமது வாழ்வாதாரத்தை இழக்கும் அளவிற்கு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனினும் இதுகுறித்து அவதானம் செலுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் தவறியிருக்கிறது.

குறிப்பாக கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் இதனால் பெருமளவில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவில் மைத்திரி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முதன்முறையாக முன்னிலையானார்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமையவே, குறித்த இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இதேவேளை, கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் விமானப் படைத் தளபதி ரொஷான் குணதிலக மற்றும் முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க மற்றும்பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் குறித்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சாட்சி வழங்குவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழ்வில் முன்னிலையானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4-6)

# ஹெரோயினுடன் சிறைச்சாலை அதிகாரி கைது

(கொழும்பு)

ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் புத்தளம் - சேனைக்குடியிருப்பு பகுதியில் கைது செய்யப்பட்டு ள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதான சந்தேக நபரிடமிருந்து 40 கிராம் 870 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2148

**யது**

வாழும் இந்த குறுகிய காலத்தில் யாரையும் வெறுக்காதீர்கள்...!



அனைவரும் ஒருவித அன்பிற்காய் மட்டும் தான் ஏங்குகிறார்கள்...!

**தயா**


இவ்வுலகில் மனதளவில் கூட துரோகம் நினைக்காத இரு ஜீவன்கள்...



பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மா, பெற்ற மாதத்திலிருந்து சுமந்த அப்பா...!

**அருண்**

டச் இல்லாத நண்பர்களை டச்சில் கொண்டு வந்ததே...!



டச் மொபைல் செய்த சாதனை...!

**அகல்யா**

அனுபவம் என்பது எதை, எப்படி செய்ய வேண்டும் என்பதில்லை, எதை எப்படி எப்போது செய்யக் கூடாது என்பதே!



**தரன்**

இதயம் இருக்கும் வரை என் இதயமான நீ என் இதயத்தில் இருப்பாய்



**சனா**

உயிருக்கு உயிராக பழகிறன் என்று சொல்லுற தோழியை விட...!



ஞாயிற்றுக்கிழமை நமக்காக உயிரக் கொடுக்குற கோழி தான் பெருசு...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 17.10.2020 - 15.11.2020

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்று, விரயாதிபதி சந்திரனோடு இணைந்து துலாம் இராசியில் சஞ்சரிக்கின்றார். அவர்களை யோகக்காரகனாக விளங்கும் செவ்வாய் பார்க்கின்றார். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. பார்க்கும் குருவால், கை நழுவிச் சென்ற வாய்ப்புகள் கைகூடி வரும். எதிர்பார்த்தபடி தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெற்றாலும், உச்சம் பெற்ற புதனோடு சேர்வதால் 'நீச்ச பங்க ராஜயோகம்' ஏற்படுகின்றது. தன லாபாதிபதியான புதன், உச்சம் பெற்றிருக்கும் பொழுது பணப்புழக்கம் சிறப்பாகவே இருக்கும். வியாபாரம் கொடிகட்டிப் பறக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கல்யாண முயற்சி கைகூடும். நல்ல மனிதர்களின் நட்பால் தொழில் வளம் பெருகும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 9-க்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஒக்டோபர் 26ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் மீன இராசிக்குச் செல்கின்றார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள் இப்பொழுது விற்பனையாகி வருமானத்தைக் கொடுக்கலாம். விற்று வந்த பணத்தை கையில் வைத்துக்கொள்ளாமல் புதிய இடம் வாங்க முதலீடு செய்வது நல்லது. வீண் விரயமாகும் நேரம் என்பதால் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. எலும்பு, நரம்பு

## கல்யாண முயற்சிகள் கைகூடும்

சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும்.

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். எனவே தனஸ்தானம் வலிமையடைகின்றது. மிதமிஞ்சிய பொருளாதாரம் உருவாகும். ஒரு சிலருக்கு கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு கூட உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்





கலாம். வாழ்க்கைத் துணைக்கும், வாரிசுகளுக்கும் வேலை கிடைத்து அதன் மூலமும் உதிரி வருமானம் வரலாம். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தை உருவாக்குகின்றார். இதனால், பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு பஞ்சம- அஷ்டமாதிபதியானவர் குரு. எனவே இக்காலத்தில் கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் கைகூடி வரும். குருவின் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுபகாரியங்கள் நடைபெறும். தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும். நண்பர்களின் ஒத்துழைப்போடு செல்வநிலை உயர வழிவகுத்துக் கொள்வீர்கள். இம்மாதம் வைரவர் வழிபாடு பலன்தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதார விருத்தி அதிகரிக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பார்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காக நீங்கள் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பொது வாழ்வில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் எண்ணம் கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு யோகமான நேரமிது. வராஹி வழிபாடு வளர்ச்சியை வழங்கும்.



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் சஞ்சரிக்கின்றார். பொதுவாக இராசிநாதன் புதன் உச்சம் பெறுவது நன்மைதான். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். திடீர் தனவரவு வந்து மகிழ்ச்சியை வழங்கும். தொழில், உத்தியோகம் போன்றவற்றில் நீங்கள் எடுத்த புது முயற்சி வெற்றி தரும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசியான உங்கள் இராசிக்கு வருகிறார். அங்கு அவர் நீச்சம் பெற்றாலும், உச்சம் பெற்ற புதனோடு சேர்வதால் 'நீச்ச பங்க ராஜயோகம்' உருவாகின்றது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீரென வரும் புதிய பங்குதாரர்களால் தொழிலில் வளர்ச்சி சிறப்பாக அமையும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் சூழ்நிலை உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தால், மீண்டும் பணியில் சேர அழைப்புகள் வரலாம்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஒக்டோபர் 26 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் மீன இராசிக்குச் செல்கின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. செவ்வாய் உங்கள் இராசிக்கு நேர்பார்

## தொழில் வளர்ச்சி சிறப்பாக அமையும்

வையில் இருப்பதால், உங்களுக்கு கோபம் அதிகம் வரலாம். உணர்ச்சி வசப்பட்டு எதையாவது பேசிவிட்டு உறவினர்களின் பகையை தேடிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். 'கட்டிய வீட்டை வாடகைக்கு விட முடியவில்லையே, குடிவர நல்ல ஆட்கள் வரவில்லையே' என்று ஒரு சிலர் கவலைப்படுவர். அருகில் இருப் பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிநாதன் வக்கிர நிவர்த்தியாகும் இந்த நேரம், அற்புதமான நேரமாகும்.




உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் காரணமாக இதுவரை நிறுத்தி வைக்கப்பட்ட சலுகைகள் இப்பொழுது மீண்டும் கிடைக்கும். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். என:வே அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். அங்கிருந்தபடி உங்கள் இராசியையே பார்க்கப் போகின்றார். அதுமட்டுமல்லாமல் 9, 11 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். ரண சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள் கூட, இனி சாதாரண சிகிச்சையிலேயே குணப்படுத்த முடியும் என்பர். வெளிநாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பார்க்கும் குருவை பலப்படுத்த குரு கவசம் பாடி, குருவை வழிபடுவது நல்லது. இம்மாதம் சக்கரத்தாழ்வார் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வளர்ச்சி அதிகரிக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் தானாக விலகுவர். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். இதுவரை மருத்துவச் செலவை அதிகரித்து வந்த, தாயின் உடல் நலம் சீராகும். உடன் பிறந்தவர்களில் ஒருவர் மட்டும் உங்களோடு இணைந்து செயற்படுவார். பணிபுரியும் பெண்களுக்குப் பாராட்டும், புகழும் கூடும். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும்.

(தொடரும்)

# புதையல் தோண்டியவர்கள் கைது

(பதுளை)

வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் தொல்பொருள் ஆய்வகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான சொரகுன ரஜமகா விகாரை வளவில் புதையல் தோண்டிய பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் உட்பட மூவர் பண்டாரவளைப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

பதுளை மாவட்டத்தின்ஹல்துமுள்ளைப் பகுதியிலேயே, மேற்படி வரலாற்று பிரசித்திபெற்ற சொரகுன ரஜ மகா விகாரை அமைந்துள்ளது.

பதுளை மாவட்ட பொலிஸ் நிலையமொன்றின் பொலிஸ் சார்ஜன்ட்டாக கடமையாற்றி வந்த இவர் ஏனைய இரு இளைஞர்களையும் கூட்டிச் சென்று குறித்த இடத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்தனர். இதன்போது குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ஐ-4)

# ஏரியைச்சுற்றி சட்டவிரோத கட்டடங்கள்

(கொழும்பு)

மொரட்டுவவில் உள்ள பொல்கொட ஏரியைச் சுற்றி 35 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத கட்டுமானங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி பொல்கட எரியைச் சுற்றி அமைக்கப்பட் டுள்ள 37 கட்டட நிர்மாண த்துக்கு சுற்றாடல் அமைச்சின் ஒப்புதல் பெறவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டவிரோத கட்டுமானங்களின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)



# ஆன்மீகம்

## இன்சொற்கள் தரும் இனிமையான வாழ்க்கை!

இன்பகரமான வாழ்வை ஒருவர் அனுபவிக்க வேண்டுமென்றால் இன்சொற்கள் பேசுவதையே அவர் தன் இயல்பாக்கிக் கொண்டுவிட்டால் போதும். ஆம்! இன்சொற்கள்தான் இரும்புக் கதவையும் திறக்கும் ஆற்றல் பெற்றவை! உறவினர் வீட்டுத் திருமணப் பந்தலில் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வருவதும் செல்வதும் நலம் விசாரிப்பதுமாக இருக்கும் பல பேர், முக்கியமான நபராக அவர் இருந்தாலும் அவர் அருகில் அமர்ந்து முகம் கொடுத்து உரையாடுவதில்லை. இன்னொருவர் தூரத்து உறவினர்தான்! இருந்தாலும் அவர் அருகில் அமர்ந்து கலகலப்பாகக் கதை பேசி சிரித்துக் களிக்கிறார். காரணம் என்ன? இதமாகவும் பதமாகவும் இவர் உரையாடும் இனிய சொற்களால்தான்! சுற்றத்தாரும் நண்பர்களும் நம்மைச் சூழ்ந்திருப்பதும், நம் சுக துக்கங்களில் பங்கேற்பதும் நம் நாவிலிருந்து வரும் நல்ல சொற்களால்தான். அனைத்து நலன்களுக்கும் மேலானது 'நா நலம் என்னும் நலன் உடைமை' என்கிறார் திருவள்ளுவர். கடிந்து கொள்வதும் வசை பாடுவதும் கசப்பான அனுபவங்களையே தோற்றுவிக்கும்.

சீ என்று, நாய் என்று, பேய் என்று பிறர்தமை
தீங்கு சொல்லாத தெளிவும் திரமொன்று
வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக்கு ஆளாக்குவாய்!

-என்று உலகினரின் இயல்பை தன்மேல் போட்டுக்கொண்டு நம்மை நல்வழிப்படுத்த கந்தகோட்ட முருகனிடம் கசிந்துருகி வேண்டுகின்றார் ராமலிங்க அடிகள். ஒருவர் வீட்டிற்கு வெளியூரிலிருந்து விருந்தினராக பெரியவர் வந்திருந்தார். அவர் தூரத்து உறவினர். பணக்காரர். ஆனால், பண்பட்டவராக நடந்து கொள்ளவில்லை. அங்கிருந்த ஒரு வாரத்தில் 'கூட்டில் போட்டிருக்கும் காய் வேகவே இல்லை. ரசம் ஒரே உப்பு' என்று விருந்தில் குறை கூறுவதும், அவர்கள் வீட்டுப்பெண், பையனிடம் குற்றம் காண்பதும் 'ஊரே கெட்டுப் போச்சு. எல்லாரும் திருட்டுப் பசங்க!' என்று பொதுபடையாகத் திட்டுவதுமாகவே பொழுதைக் கழித்தார். அக்கம் பக்க வீட்டினரும் இதை அறிந்து கொண் டனர். ஒருவாரம் கழித்து தன் ஊருக்குப் புறப்பட்டார் அந்தப் பெரியவர். ரயில் நிலையத்தில் அவரை ஏற்றிவிட குடும்ப உறுப்பினர்கள் இரண்டு பேர் ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர். நிலையத்திற்குள் நின்றுகொண்டிருந்த



எதிர் வீட்டுக்காரர் கேட்டார்: 'என்ன, அவரை ஏற்றிவிட எல்லாரும் வந்திருக்கிறீர்கள்.

வசை பாடிய அவர் மேல் இப்படி ஒரு பாசமா?' 'அதெல்லாம் ஒன்றுமில்லை! இன்று அவர் ரயில் ஏறாவிட்டால் நாங்கள் அனைவரும் குடும்பத்தோடு ரயில் ஏறுவதற்காகத்தான் வந்துள்ளோம்!' என்று பதில் வந்தது. வன்சொற்கள் நம் வாயிலிருந்து வந்தால் உறவும் நட்பும் நம்மை உதறிவிடும். ஆக்கமும் கேடும் நாம் பேசுகின்ற பேச்சாலேயே அமைகின்றன என்கின்ற வள்ளுவர் மேலும் ஒன்றை புதுமையான கோணத்தில் நமக்குப் புலப்படுத்துகின்றார். எல்லோரிடமும் இன்சொல் பேசி இனிமையுடன் பழகுபவர் வாழ்வில் வறுமையே வராது என்கிறார். இனிமையாகப் பேசுபவர்க்கு வறுமையே ஏன் வராது தெரியுமா? உறவினர்களும் நண்பர்களும் 'நல்லவர்க்கு இப்படி ஒரு சோதனை வரலாமா' என்று எண்ணி ஏற்ற உதவிகள் செய்து அவரின் ஏழ்மை நிலையை மாற்றி விடுவார்கள் என்பதால்தான்! மனஇய லோடு தொடர்புபடுத்தித்தான் வள்ளுவர் இந்த மகத்தான உண்மையைத் தன் குறளில் பதிவு செய்துள்ளார்.

'துன்புறூஉந் துவ்வாமை
இல்லாகும்யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.

(துவ்வாமை - வறுமை) சொற்கள் நம் வாயிலிருந்து இனிமையாகவும், சகஜமாகவும் வெளிவர வேண்டும். 'ஒருசொல் போதுமானது என்றால் இரு சொற்களை செலவு செய்யாதே' என்கிறார் சீன ஞானி கன்பூஷியஸ். 'நேற்று நீ தானே அப்படி உறுதி அளித்தாய்! இன்று ஏன் பின்வாங்குகிறாய்?' என்கின்றனர் நண்பர்கள்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள கைதிகள் இனி பூஸாவில்

(கொழும்பு)

சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் கைதிகளை பிரித்தெடுத்து பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல் தெனிய தெரிவித் துள்ளார்.

பூஸா சிறைச்சாலையை உயர் பாதுகாப்பு சிறைச்சாலையாக பிரகடனப்படுத்தும் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஊடாக சமுதாயத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வண்ணம் விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கர்தினாலுக்கு எதிராக கருத்து வெளியிட்ட பெண் கைது

(கொழும்பு)

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை குறிப்பிட்டு இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமாக சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவித்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் பத்தரமுல்ல பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் சமூக ஊடகங்களில் காணொளி ஒன்றை வெளியிட்டு இவ்வாறு இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமான கருத்துக்களை தெரிவித்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## பரீட்சையில் மோசடி விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

தற்போது நடைபெறும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்பில் விசாரணை இடம்பெறுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பீ.சனத் பூஜித் தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வத் திணைக்களம் இந்த நடவடிக்கைய்யை மேற் கொண்டுள்ளது.


மோசடிகளைத் தவிர்ப்பதற்கு அனைத்துப் பரீட்சை நிலையங்களுக்கும் மேலதிக உதவி மண்டப தலைமை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 180 | 200 |
| தக்காளி | 120 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 100 | 80 |
| கோவா | 140 | 130 | 110 | 120 |
| கரட் | 100 | 170 | 180 | 200 |
| பூசணி | 50 | 50 | 50-60 | 50 |
| புடோல் | 80 | 70 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 230 | 220-240 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 140-160 | 120 |
| பாகற்காய் | 250 | 260 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 80 |
| பயற்றங்காய் | 140 | 130 | 120 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 250 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 160 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 20 | 40 | 60 |
| தேசிக்காய் | 150 | 180 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 320 |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | 280 |
| முள்ளங்கி | 60 | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | -- | — |




# அன்பின் மதிப்பு



அக்பர் என்கிற அரசன் நோய்வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே சென்றான்.

அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அக்பர் அறிந்து கொண்டார்.

அவன் மன்னனிடம், அரசே உங்கள் உடல் நிலை சரியாக வேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் வைத்து அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப்போயிருந்தது. அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்த முத்துமாலையைக் கழற்றி அந்த விவசாயிக்கு பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், அரசே, கெட்டுப்போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு? என்று கேட்டார்.

மன்னனோ, அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று கள்ளங் கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான்.

அவனது அன்பு உண்மையானது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம்.

நான்அளித்த முத்து மாலை கூட அவனது அன்புக்கு ஈடாகாது என்று கூறினான்.

**நீதி :நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## பின்கதைச் சுருக்கம்

**103**


ஐந்தாம் மகிந்தன்

ராஜராஜனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர், ராஜேந்திர சோழன். போர்த்திறமைகளுக்காக தனிக்கவனம் பெற்றார். கலிங்கம் வரை ராஜராஜன் தன் எல்லைகளை விரிவுபடுத்தினார். ஆனால், ராஜேந்திர சோழனின் போர்ப்படைகள் வடக்கே ஒரு பெரிய பிரளயத்தையே ஏற்படுத்தின.

சாளுக்கியர்கள், கலிங்கர்களுடன் சேர்ந்ததால் வடக்கில் ஒரு பெரிய போரைச் சந்திக்க வேண்டியிருந்தது. துணிச்சலுடன் துங்கபத்திரா நதியைக் கடந்தது சோழர் படை.

சாளுக்கியர், கலிங்கர் ஆகியோரைத் தோற்கடித்து, வங்காளத்தை ஆண்டு கொண்டிருந்த மகிபாலனை வென்று, அங்கும் புலிக்கொடியைப் பறக்கவிட்டது.

இலங்கை மீதும் படையெடுப்பு தொடர்ந்தது. பராந்தகனுக்கும் பாண்டிய மன்னன் இராசசிம்மனுக்கும் நடந்த போரில் இலங்கையில் மணிமுடியையும் செங்கோலையும் ஒளித்து விட்டு இராசசிம்மன் தலைமறைவானார்.

கைக்குச் சிக்காமல் இருந்த மணிமுடியையும் செங்கோலையும் தேடிச் சோழர்படை சென்று ஏமாற்றத்துடன் திரும்பியதை முன்பு பார்த்தோம்.

இந்த மணிமுடியைக் கைப்பற்ற இலங்கையின் மீது மீண்டும் ஒரு போர் தொடுத்தார் ராஜேந்திரன். ஐந்தாம் மகிந்தனை சிறைபிடித்துப் போரில் வெற்றி கண்டார்.

கையில் சிக்காமல் பல ஆண்டு காலம் கண்ணாமூச்சி காண்பித்த மணிமுடி கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக பாண்டியர்களுடனும் சேரர்களுடனும் கடுமையான சண்டையில் ஈடுபட்டார் ராஜேந்திரன்.

தந்தை ராஜராஜன் வழங்கிய கடுமையான போர்ப்பயிற்சிகள் அவர் ஆட்சிக் காலத்தில் பெரும் உதவி செய்தன. நிகோபார் தீவு வரை சென்றது ராஜராஜனின் படை.

அடுத்ததாக வந்த ராஜேந்திர சோழனின் படை, மலேசியத் தீவு வரை சென்று சோழர்களின் வீரத்துக்குப் பெருமை தேடித் தந்தது.

ராஜேந்திரன், தன் மகனான ஜடாவர்மன் சுந்தர சோழபாண்டியனைப் பாண்டிய மண்ணில் முடிசூடச் செய்தார். கி.பி. 1044 வரை ராஜேந்திர சோழனின் ஆட்சி இருந்தது.

அடுத்ததாக ராஜேந்திர சோழனின் தம்பி ராஜாதி ராஜன் (என்கிற ராஜேந்திர சோழதேவன்) கி.பி 1052 முதல் 1064 வரை சோழ நாட்டை ஆட்சி செய்தார். இவரும் சாளுக்கியர்களுடன் போரிட்டு உள்ளார்.

(தொடரும்)

**அன்புச் சிறார்களே! உங்கள் அபிமானத்திற்குரிய வலம்புரி சிறுவர் பகுதியில் 22.10.2020 முதல் ``மகா அலெக்ஸாண்டர் வரலாறு'' வெளி வரும். வாசித்துப் பயன் பெறுங்கள்.**

நீங்கள் ஒரு தீர்மானம் செய்வதற்கு முன்பு நூறு தடவை சிந்தியுங்கள்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 20ஆவது திருத்தச் சட்டமூலம் பௌத்த பீடங்களுக்கும் ஆப்பு வைக்கும்

கௌரவர் சபையில் விதுரனைத் தவிர மற்றெல்லோரும் துரியோதனனுக்குப் பயந்து அவன் வழிச் சென்றனர்.

இதனால் அவர்கள் அத்தனை பேரும் அழிவைச் சந்தித்தனர்.

ஆக, அதர்மம் எழுந்தாடும்போது அதனைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் உரியவர்கள் தயாராக வேண்டும்.

எனக்குப் பதவி கிடைக்கும் என்பதற்காக அதர்மத்தைச் சுட்டிக் காட்டத் தவறுவது நம்மை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்வதாகும்.

இலங்கையின் இன்றைய ஆட்சிப்பீடம் என்பது ஒட்டுமொத்த சிங்கள மக்களின் வாக்குகளால் ஆனாது.

கூடவே பௌத்த பீடங்களும் சிங்களப் புத்திஜீவிகளும் சேர்ந்து இந்த அரசாங்கத்தை ஆட்சிக் கட்டிலில் ஏற்றி வைத்தனர்.

தமிழர்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய அரசாங்கம் என்ற நினைப்பும் சிங்களத் தரப்புகளிடம் இருந்ததால், ஆட்சி அமைக்கும் விடயத்தில் அவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டனர்.

எனினும் இப்போது 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியாக இருக்கிறார்.

20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், நாட்டில் சர்வாதிகாரம் தலைவிரித்தாடும். இதற்கு எவரும் ஆதரவு வழங்கக் கூடாது என பௌத்த பீடங்கள் போர்க்கொடி தூக்குகின்ற அளவுக்கு நிலைமை வந்து விட்டது.

பௌத்த பீடங்களின் எதிர்ப்புக்களைத் தாண்டி எந்த ஆட்சியாளர்களாலும் எதுவும் செய்ய முடியாது என்பதே இலங்கையின் வழமையாக இருக்கிறது.

எனினும் பௌத்த பீடங்களின் எதிர்ப்பையும் தாண்டி 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியே தீருவோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதில் 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், பௌத்த பீடங்களின் எதிர்ப்பை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை என்ற விடயம் பதிவிடப்படும்.

இதன் பிற்பாடு பௌத்த பீடங்கள் கூப்பாடு போட்டாலும் அதனை எவரும் கணக்கிலெடுக்க மாட்டார்கள்.

இது ஒரு பக்கம் என்றால் மறுபக்கத்தில், அடுத்த தேர்தலின்போது பௌத்த பீடங்களின் நிலைப்பாடு எவ்வாறாக இருக்கும் என்பது தெரிந்தாகிவிடும்.

இதை நாம் கூறும்போது, 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறிவிட்டால், சர்வ வல்லமை கொண்ட ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ அவதாரம் எடுத்து விடுவார்

இதன் பிற்பாடு அடுத்த தேர்தலை வைப்பதா? அல்லது காலம் தாழ்த்திப் போடுவதா? என்பதையெல்லாம் பௌத்த பீடங்களால் தீர்மானிக்க முடியாது.

நிலைமை இதுவெனில் 20ஆவது திருத்தச் சட்டமூலம் பௌத்த பீடங்களின் மேலாதிக்கத்துக்கும் ஆப்பு வைப்பதாகவே இருக்கும்.

# டெங்கு நுளம்பு பரவாதவாறு மக்கள் சூழலை பாதுகாக்கவும்

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு பரவாதவாறு பொதுமக்கள் சுற்றுச்சூழலை பாதுகாத்து கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ். குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதன் காரணமாக இனி வரும் நாட்களில் யாழ்ப்பாண குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

வழமையான யாழ். மாவட்டத்தில் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் டெங்கு நோயால் பாதிப்படைவோரின்எண்ணிக்கை அதிகரிப்பது வழமை. அதேபோல் தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளது. எனவே பொது மக்கள் நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தல் வேண்டும். மற்றும் தங்களுடைய வீடுகளில் நுளம்புப் பெருக்கம் ஏற்படக்கூடிய இடங்களை நுளம்பு பெருக்கம் ஏற்படாதவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது இந்த ஆண்டு இன்று வரை டெங்கினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை சற்று குறைவாகவே காணப்படுகின்றது. எனினும் அந்த நிலைமையினை மேலும் தொடர்ச்சியாக பேணுவதற்கு பொது மக்கள் சுகாதார பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதேபோல யாழ்.மாவட்டத்தின் சகல இடங்களிலும் நுளம்பு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் ஒவ்வொரு பிரதேசத்திலும் நுளம்பு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே பொதுமக்கள் தமது வீடுகளில், சுற்றாடலில் நுளம்பு பெருக்கம் ஏற்படும் இடங்களை சுத்தப்படுத்தி டெங்கு நுளம்பு பெருகாத வகையில் தமது சுற்றுச்சூழலை பாதுகாத்துக் கொள்வதன் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு நோய் தாக்கத்தினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

எனினும் இனிவரும் மாதங்களில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பது வழமை. எனவே பொதுமக்கள் டெங்கு நோய் தொடர்பிலும் விழிப்பாக செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# கொரோனா சந்தேகத்தில் ஐந்து பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதி

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் கொரோனா சந்தேகத்தில் ஐந்து பேர் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் வீதி திருத்தப், பணியில் ஈடுபட்டுள்ள தனியார் கம்பனி ஒன்றின் பணியாளர்கள் இருவருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டதையடுத்து குறித்த கம்பனி உத்தியோகத்தர்கள் குறித்த இருவரையும் நேற்று வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்து வந்து அனுமதித்துள்ளனர்.

அவர்கள் அனுமதிக்கப்பட்டு ஒரு மணிநேரத்திற்கும் குறித்த கம்பனியில் வீதி திருத்த பணியில் ஈடுபட்டிருந்த மேலும் மூவருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவர்களும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஐவரும் வவுனியா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த மூவர் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. (ம-3,250)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்றும் ஒருநாளும் சொல்லாதீர்கள். ஏனெனில் நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். உங்களுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும்கூட உங்களுக்கு ஒரு பொருட்டல்ல. நீங்கள் எதையும் எல்லாவற்றையும் சாதிக்க முடியும். சர்வ வல்லமை படைத்தவர்கள் நீங்கள்.

- சுவாமி விவேகானந்தர்.

# புளியங்குளத்தில் விபத்து இளைஞன் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, புளியங்குளம் பகுதியில் ஏ9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த செபஸ்தியான் சுரேஸ் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்து குறித்து புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## விருப்பங்கள் நிறைவேறும்

❖ அனைத்திலும் இறைவனை காண்பது நம்முடைய லட்சியமாகும். அனைத்திலும் காண முடியாவிட்டால், நாம் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.


❖ வாழும் காலம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், லட்சியத்தை அடைவதே நம்முடைய உயிர் மூச்சாக இருக்க வேண்டும்.

❖ இயற்கையின் ரகசியத்தை அறியும் போது மனிதன் இயற்கையின் உதவியால் இயற்கைக்கு அப்பாற்பட்ட பரம்பொருளை உணர்வதுடன் மரணத்தையும் வெல்கிறான். இயற்கையைக் கடந்த அந்தப் பொருளின் உதவியால் அவன் எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறான்.

❖ நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம்மாறுவதுடன், குரலும், தோற்றமும் மாறுகிறது. அப்போது நீங்கள், மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக மாறிவிடுவீர்கள்.

❖ பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. பக்தியுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்.

# கலைத்துறையில் அரசியல் தலையீடு தேவையற்றது



## 800 குறித்து சரத்குமார்

இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை 5 மொழிகளில் 800 என்ற பெயரில் படமாக்க உள்ளனர், இந்தப் படத்தில் முரளிதரனாக விஜய் சேதுபதி நடிக்க, கனிமொழி படத்தின் இயக்குநர் ஸ்ரீபதி சபாபதி இயக்க உள்ளார்.

ஆனால், ஈழத்தமிழ் மக்களைக் கொன்று குவித்த இலங்கை அரசிற்கு ஆதரவாக கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் குரல் கொடுத்ததாக கூறி அவரது வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் விஜய் சேதுபதி நடிக்க தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள் உள்ளிட்ட பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நடிகர் சரத்குமார் தனது முகநூல் பக்கத்தில் கலைத்துறையில் அரசியல் தலையீடு மற்றும் எதிர்ப்புகள் முறையற்றது எனக் கூறி நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டு அதில், "கலைஞர்களுக்கு அணைகட்டக் கூடாது.

எல்லைகளைக் கடந்து கதைகளைத் தேர்வு செய்து நடிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு" எனக் கூறி நடிகர் விஜய்சேதுபதிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார். (4)




## இரண்டு சுப்பர் ஓவர் பஞ்சாப்பிடம் சுருண்டது மும்பை



ஐ.பி.எல். தொடரின் 36 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் பஞ்சாப் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற மும்பை அணி துடுப்பாட்டம் தெரிவு செய்தது. ஆரம்ப வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் டி காக் ஆகியோர் களமிறங்கினர், இந்த ஜோடியில் ரோகித் சர்மா சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அவரைத்தொடர்ந்து களமிறங்கிய சூர்யகுமார் யாதவ் ஓட்டம் ஏதும் எடுக்காமலும், இஷான் கிஷான் 7 ஓட்டங்களும் அடுத்து களமிறங்கி சீரான ஆட்டத்தை வெளிப்படுத்திய குர்னால் பாண்ட்யா 34 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய ஹர்திக் பாண்ட்யா ஏமாற்றமளித்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடி தனது அரைசதத்தை பதிவு செய்த டி காக் 53 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

அதிரடி காட்டிய பொல்லார்டு 34, கௌல்டர் நைல் 24 கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

முடிவில் மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்கள் எடுத்தது.

177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணியில் துவக்க ஆட்டக்காரர்களாக மயங்க் அகர்வாலும் கே.எல்.ராகுலும் களம் இறங்கினர்.

மயங்க் அகர்வால் சொற்ப ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றம் அளித்தார். 3 ஆம் விக்கெட்டிற்கு களம் இறங்கிய கெய்ல் குறைந்த ஓட்டங்களில் வெளியேறினர்.

எனினும் கே.எல்.ராகுல் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நிகோலஸ் பூரான் (12 பந்துகளில் 24 ஓட்டங்கள்) எடுத்து ஆட்டமிழந்தார்.

51 பந்துகளில் 7 பவுண்டரிகள் 3 சிக்சர்கள் உட்பட 77 ஓட்டங்கள் சேர்த்த கே.எல். ராகுல், பும்ரா பந்தில் போல்டு ஆகி ஆட்டம் இழந்தார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், 8 ஓட்டங்கள் மட்டுமே பஞ்சாப் அணி எடுத்தது. இதனால், ஆட்டம் சமன் ஆனது.

இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க சுப்பர் ஓவர் முறை பின்பற்றப்பட்டது. சுப்பர் ஓவரில் முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணி பும்ராவின் துல்லிய பந்து வீச்சால் ஓட்டங்களைச் சேர்க்க முடியாமல் திணறியது.

2 விக்கெட்டுகளை இழந்து வெறும் 5 ஓட்டங்களை மட்டுமே பஞ்சாப் அணி சுப்பர் ஓவரில் சேர்த்தது. இதையடுத்து, 6 ஓட்டங்கள் வெற்றி என்ற இலக்குடன் சுப்பர் ஓவரில் களமிறங்கிய மும்பை அணியும் தடுமாறியது.

ரோகித் சர்மா - டி காக் கூட்டணி 5 ஓட்டங்களை மட்டுமே சுப்பர் ஓவரில் சேர்த்தது. இதனால், மீண்டும் ஆட்டம் சமன் ஆனது.

இதையடுத்து, வெற்றியை தீர்மானிக்க 2 ஆவது முறையாக சுப்பர் ஓவர் முறை கடைபிடிக்கப்பட்டது. இம்முறை மும்பை இந்தியன்ஸ் அணியில் பொல்லார்டும் பாண்ட்யாவும் களம் இறங்கினர்.

மும்பை அணி சுப்பர் ஓவரில் 11 ஓட்டங்களைச் சேர்த்தது. இதையடுத்து, 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது.

மும்பை அணி சார்பில் பவுல்ட் சுப்பர் ஓவரை வீசினார். பஞ்சாப் அணியில் கிறிஸ் கெயிலும் மயங்க் அகர்வாலும் களம் இறங்கினர்.

முதல் பந்தை எதிர்கொண்ட கிறிஸ் கெயில் சிக்சருக்கு விளாசினார். 2 ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது. 3 ஆவது மற்றும் 4 பந்தில் பவுண்டரியை விளாசிய மயங்க் அகர்வால் பஞ்சாப் அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தார். (4)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## சுப்பர் ஓவரில் சரணடைந்தது ஐதராபாத்




13 ஆவது ஐ.பி.எல். தொடரின் 35 ஆவது போட்டி சன் ரைசர்ஸ் ஐதராபாத், கொல்கத்தா கினைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையே ஆரம்பமானது.

அபுதாபியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியானது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களை குவித்தது. கொல்கத்தா அணி சார்பில் சுப்மன்கில் 36 ஓட்டங்களையும், இயன் மோர்கன் 34 ஓட்டங்களையும், தினேஷ் கார்த்திக் 29 ஓட்டங்களையும், நிட்டிஸ் ரானா 29 ஓட்டங்களையும், ராகுல் திரிபாதி 23 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஐதராபாத் அணி சார்பில் நடராஜன் 2 விக்கெட்டுகளையும், பசில் தம்பி, விஜய் சங்கர் மற்றும் ரஷித் கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர். 164 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஐதராபாத் அணியும் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால் போட்டி சுப்பர் ஓவருக்கு சென்றது. ஐதராபாத் அணி சார்பில் அதிகபடியாக ஜோனி பெயர்ஸ்டோ 36 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 29 ஓட்டங்களையும், அப்துல் சமாட் 23 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 47 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

கொல்கத்தா அணி சார்பில் பந்து வீச்சில் லொக்கி பெர்குசன் 3 விக்கெட்டுகளையும், வருன் சக்கரத்தி, பேட் கம்மின்ஸ், சிவம் மாவி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐதராபாத் அணியின் முதல் விக்கெட் முதல் பந்திலேயே வீழ்த்தப்பட்டது.

அதன்படி டேவிட் வோர்னர் லொக்கி பெர்குசனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து அப்துல் சமாட் களமிறங்கி, முதல் பந்தில் இரண்டு ஓட்டங்களைப் பெற்று அடுத்த பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

சுப்பர் ஓவரின் விதிப்படி ஐதராபாத் அணியின் இரண்டு விக்கெட்டுகளும் 2 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட கொல்கத்தாவுக்கு வெற்றியிலக்காக 3 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த கொல்கத்தா அணியின் ஆரம்ப வீரர்களாக இயன் மோர்கன் மற்றும் தினேஷ் கார்த்திக் களமிறங்கினர். ஐதராபாத் அணி சார்பில் ரஷித் கான் பந்துப் பரிமாற்றம் மேற்கொள்ள கொல்கத்தா அணியானது நான்காவது பந்து வீச்சில் வெற்றி பெற்றது. (4)

## படுகாயமடைந்த...

துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் மரணமடைந்திருந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கடந்த இரண்டு நாட்களாக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் மரணமடைந்தார்.

சம்பவத்தில் முல்லைத்தீவு கரிப்பட்ட முறிப்பு பகுதியைச்சேர்ந்த சுப்பிரமணியம் சிவாகரன் என்ற நபரே மரணமடைந்தவராவார். (ம-3,299)

## தெஹிவளையில்...

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் இடம்பெயர்ந்தோரை அழைத்துச் சென்றதன் அடிப்படையில் பொது நிதிகளை குற்றவியல் முறையில் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் ரிஷாத் பதியூதீனைக் கைது செய்ய சட்டமா அதிபர் பணித்திருந்தார்.

அதனடிப்படையில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் 6 அணிகள் அவரைக் கைது செய்ய கடந்த 14ஆம் திகதி முதல் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

நேற்று திங்கட்கிழமை காலை தெஹிவளையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியூதீன் நேற்று மாலை கோட்டை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அவரை பிணையில் விடுவிக்க மன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. பிணை வழங்க குற்றவியல் விசாரணைப் பிரிவினர் கடும் ஆட்சேபனையை முன் வைத்தனர்.

இந்த நிலையில் ரிஷாத் பதியூதீனை வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-3)

## 232 பேருக்கு...

போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று திங்கட்கிழமை 232 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளில் குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3,18)

## ரிஷாத் பதியூதீனு...

தவிர்க்க உதவியதற்காக மேலும் 7 நபர்களை குற்றவியல் புலனாய்வுத்துறை கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக வெல்லம்பிட்டியில் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர். ரிஷாத்தை மறைக்க உதவியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் ரிஷாத் தங்கியிருந்த இடம் குறித்த தகவல் கிடைத்ததாக தெரிவித்தார்.

களுபோவில, கொஹுவெலவில் உள்ள வீடொன்றில் இரண்டு நாட்கள் இருந்ததாகவும், 15ஆம் திகதி தெஹிவளையிலுள்ள வீடொன்றிற்கு சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதானவர்களில் மருத்துவர் மற்றும் மனைவி, வெளியுறவு நிறுவன பிரதிநிதியொருவரும் உள்ளடங்குவதாக தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் கைது செய்யப்பட்ட வெளியுறவு நிறுவன பிரதிநிதி, கொஹுவெலவிலிருந்து தெஹிவளைக்கு ரிஷாத் பயணிக்க உதவியதாக அடையாளம் காணப்பட்டார்.

எம்.பியை கொண்டு செல்ல பயன்படுத்திய வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## யாழில் இனங்...

சாலைக்கு நேற்று மாலை அனுப்பப்பட்டார் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கொரோனா விசேட வைத்தியசாலை நேற்றுக் காலை திறக்கப்பட்டபோதிலும் அதன் அனைத்து வேலைகளும் நிறைவடையாமை காரணமாகவே அவர் நேற்று புத்தளம் இரணவில வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்டால் அவர்கள் மருதங்கேணி விசேட வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,60)

## கச்சாயில்...

வாள் உள்ளிட்ட அபாயகரமான ஆயுதங்களை பொலிஸார் மீட்டதுடன் இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

ஏற்கெனவே குற்றச்செயல் ஒன்றுடன் தொடர்புபட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நபர்ஒருவரே இவ்வாறு கைதாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,30)

## மாவை - விக்...

தலைவர் சி.வி.விக்னேஸ்வரனும் நேற்று முன்தினம் நேரில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை நல்லூரிலுள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது. இதன்போது சுமார் 30 நிமிடங்கள் வரை இருவரும் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழ் தேசிய கட்சிகளிற்குள் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சி நடந்து வரும் நிலையில், அந்தச் சந்திப்பில் இதுவரை சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் விக்னேஸ்வரனை நேரில் சந்தித்து, அது குறித்து மாவை சேனாதிராஜா விளக்கமளித்துள்ளார்.

அத்துடன், தலைவர்கள் மட்ட கலந்துரையாடலில் விக்னேஸ்வரன் கலந்து கொள்ள வேண்டியதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எந்த தரப்பிற்கும் பாதிப்பில்லாமல் அமைப்பு ரீதியாக எப்படி இணைந்து செயற்படுவதென்பது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் கட்சிகள் சந்தித்து கொண்டபோது; விக்னேஸ்வரன், கஜேந்திரகுமாரிற்கு சந்திப்பு குறித்து விளக்கமளிக்கப்போவதாக மாவை சேனாதிராஜா குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி, கஜேந்திரகுமாரையும் மாவை சேனாதிராஜா நேரில் சந்திக்கவுள்ளார். அநேகமாக நாளை கொழும்பில் அந்த சந்திப்பு நடக்கலாமென தெரிய வருகிறது. (ம-3)

## தமிழ...

றேன்.

உங்கள் செயலானது எமது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களைக் கூட்டியுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை நீங்கள் நன்கறிவீர்கள் என்று நம்புகின்றேன். அத்துடன் இலங்கை இந்திய உடன்பாட்டையும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தையும் நீங்கள் வெவ்வேறாகப் பகுத்துப் பார்த்திருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன். அண்மையில் மதிப்பிற்குரிய திருமதி. வானதி ஸ்ரீனிவாசன் தலைமைத்துவத்தின் கீழ் புதிய இந்திய/போரத்தால் நடத்தப்பட்ட "சூம்" (Zoom) வழிக் கலந்துரையாடலின்போது 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய உடன்பாட்டின் முழுமையானநடை முறைப்படுத்தலானது எம் இருதரப்பாருக்கும் நன்மை பயக்கும் என்று கூறியிருந்தேன். என்னுடைய தமிழ்ப் பேச்சின் ஆங்கிலமொழியாக்கத்தின் பிரதியொன்றை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

ஒருசில விடயங்கள் மாண்புமிகு உங்களின் பிரத்தியேகமான அவதானத்தைப் பெறவேண்டும்.

1. அண்மையில் இந்தியாவின் கொடையாகக் கொடுக்க உடன்பட்ட தொகையான 15 மில்லியன் டொலர் தொகையை இரு நாடுகளுக்கிடையிலான பௌத்த நட்புறவை மேம்படுத்தவும், பௌத்த சமய வணக்க ஸ்தலங்களைக் கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும் மற்றும் தொல்பொருளியல் சம்பந்தமான கூட்டுநடவடிக்கைகளை எடுப்பதற்கும் முனையும்போது இலங்கையின் வடகிழக்கு தமிழரின் தாயகப் பிரதேசத்தில் அத் தொகையின் நலனைப் பாவிக்கக் கூடாதென்ற ஒரு உத்தரவாதத்தை இலங்கைப் பிரதமர் மதிப்பிற்குரிய மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுக் கொள்வது உசிதமானது.

2. மேலும் இருதரப்பு ஆயுதமேந்திய படைகளின் கூட்டை வலுப்படுத்த வழங்கப்படும் உதவிகள் மற்றும் பயிற்சிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்குஎதிராகப் பாவிக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தையும் மதிப்பிற்குரிய மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 87 பேருக்கு...

வர்களில் 21 பேர் கொரோனா தொற்றுறுதியாகியவர்களுடன் நெருங்கமாக பழகியவர்கள் என்றும் 19 பேர் தனிமைப் படுத்தலில் இருந்தவர்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் கொரோனா தொற்றுறுதியானதை அடுத்து அங்கு அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2,162 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 625 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1623 திகதி 2020/10/19
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 18 40 43 48
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0647
A 24 43 51 59 78

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/10/19 சீட்டிழுப்பு இலக்கம் 1545
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 01 32 36 41

மஹஜன சம்பத
திகதி 2020/10/19
சீட்டிழுப்பு இலக்கம் 4280
G 8 7 5 0 8 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2575
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 15 28 39 57
தேசிய லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1699
சீட்டிழுப்பு திகதி 19/10/2020
வெற்றி இலக்கங்கள் 27 32 49 55
ஆங்கில எழுத்து A
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,163,992
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 19/10/2020 வெற்றி வாரம் 2957
சுப்பர் ஜக்பொட் ரூ. 24,90,535
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 05 15 41 43
மிதுனம்
4987
806
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,360,020

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1076
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.10.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,515,080/-
அத கோடிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 22 30 63 66
ஆங்கில எழுத்து Y

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்புத் திகதி: 2020.10.19
சீட்டிழுப்பு இல.: 3406
வர்ணம்: நீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,736,064.40
வெற்றி இலக்கங்கள் 04 14 16 53
ஆங்கில எழுத்து D
8691

# யாழில் கொரோனா சுமூகமாக இருப்பினும்

# குடாநாட்டு மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம்

## யாழ். அரச அதிபர் க. மகேசன் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலைமை சுமூகமாக காணப்படுகின்றது எனினும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.**

**யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

யாழ். மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளது. அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இன்று 323 குடும்பங்களைச் சேர்ந்த 595 நபர்கள் மட்டுமே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொரோனா தொற்றுக்குள்ளானவரின் குடும்பத்தினர் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய பி.சி.ஆர் பரிசோதனை வரை கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் புங்குடுதீவு பகுதியானது தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது. அங்குள்ள சிலரது பி.சி.ஆர் முடிவுகள் வெளிவந்ததும் தற்காலிக முடக்கம் விரைவில் நீக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி தற்போது தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றப்பட்டு இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கல்லூரி தனிமைப்படுத்தல் நிலையமாக மாத்திரம் பயன்படுத்தப்படவுள்ளது.

அங்கு தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டால் அவர்கள் வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார்கள். எனவே குறித்த விடயம் தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை என மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## பாராளுமன்றம்...

சட்டம் குறித்த பாராளுமன்ற விவாதத்திற்கு மேலும் 10 மணித்தியாலங்கள் கூடுதலாக ஒதுக்குவதற்கு ஆளும் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர், கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார். வாய்மொழி மூல கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு மணித்தியாலமும் விவாதத்திற்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் இன்றைய தினம் கூட உள்ளதாகவும், 20ஆவது திருத்தச் சட்டம் குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து, சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பார் என தெரிவித்துள்ளார். இந்த இரண்டு தினங்களிலும் பகல் போசனம் மற்றும் ஓய்வு நேரம் என்பன இரத்து செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழமையாக பாராளுமன்றின் நடவடிக்கைகள் மாலை 4.30 மணிக்கு பூர்த்தியாகும் என்ற போதிலும் 20ஆவது திருத்தச் சட்டம் குறித்த விவாதம் நடத்தும் தினங்களில் அமர்வுகள் மூன்று மணித்தியாலங்கள் நீடிக்கப்படும் எனவும் இதன்படி இரவு 7.30 மணி வரையில் விவாதம் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டம் குறித்த பாராளுமன்ற வாக்கெடுப்பு நாளை 21ம் திகதி இரவு 7.30 மணிக்கு நடை பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

**காணி தேவை (15-25 ஏக்கர்)**
**பளை, இயக்கச்சி, முகமாலை பகுதிகளில்**

தென்னஞ் செய்கைக்குரிய அல்லது தென்னையுடன் கூடிய காணி பளை, இயக்கச்சி, முகமாலை பகுதிகளில் விற்க உள்ள காணி உரிமையாளர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**தரகர் தேவையில்லை.** (4420)

**தொடர்பு : 076 623 4871**

**ஜோதிடம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (4422)

**தொடர்பு - 077 572 9724**

# கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கல்வி வலய வர்த்தகபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
**திருமதி சி. சிவலோஜினி**
அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்
**நாகேஸ்வரி சரசானந்தராசா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-549)

நலன்புரிச் சங்கம், வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம், மருதனார்மடம்.

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன (C-308)

**2022ல் நீங்களும் அமெரிக்காவில்..**

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் **0768226241**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் — விண்ணப்ப முடிவு திகதி **10-11-2020**

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

**V2 Travels** www.facebook.com/v2tandt

# கட்டாக்காலி மாடுகள் பற்றிய அறிவித்தல்

கைதடி, நாவற்குழி விவசாய சம்மேளன எல்லைக்கு உட்பட்ட பகுதியில் M.K குறியுடைய சிவப்பு நிற பசுவும் குறியில்லாத பசுக்கன்றும் 18.10.2020 ஆம் திகதி அன்று பிடிக்கப்பட்டு பராமரிப்பாளர் க. துரைசிங்கம் என்பவர் வீட்டில் கட்டப்பட்டுள்ளது.

உரிமையாளர் தகுந்த ஆதாரத்துடன் அழிவு தொகை, பராமரிப்புத்தொகை என்பவற்றை செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

**கைதடி - நாவற்குழி கமக்கார அமைப்பு**

# 45ஆவது நாள் நினைவுகளில்



அமரர்
**மகாலிங்கம் வின்சன் கோமகன்**
( ஓய்வுநிலை கணித ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் )

06.09.2020 கர்த்தருக்குள் நித்திரையடைந்த அன்னாரின் நினைவு வழிபாடும் நன்றி நிகழ்வுடனான மதிய போசனமும் இன்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் Covid - 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி இடம்பெறுகின்றதென்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (C-546)

பாரகம் : 18.09.1957
பரமபதம் : 06.09.2020

மாறாம்புலம், அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
077 078 4411
தகவல் குடும்பத்தினர்

**மணமகள் தேவை**

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com **077 219 4331**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வீடு வாடகைக்கு**

சுன்னாகம் ஸ்ரேசன் வீதிக்கு பக்கமாக பொலிஸ் நிலையத்திற்கு எதிராக தெருவிலிருந்து 150 m தொலைவில் 13 அடிப் பாதையுடன் கூடிய 6 அறைகளையும் இரண்டு கூடங்களையும் விறாந்தைகளையும் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிட வசதிகளும் உண்டு. (4415)

**தொடர்பு 077 108 3363**

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-308)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.